
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர் : 13<br>இதழ்: 9 | பிலவஸு மார்கழிமீ<br>டிசம்பர் '61–ஜனவரி '62 | வருட<br>சந்தா<br>ரூ. 3-00 |

சுந்தரரை ஏற்க என அர்ச்சகர் உருவில்
அமலன் பரவையிடம் வேண்டல்

(பக்கம் 388)

## உள்பொருள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முருகன் டெலிபோன் (திருப்புகழ்மணி) | ... | 385 |
| 2. | பரவைபால் தூது (கி. வா. ஜ.) | ... | 388 |
| 3. | குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) | ... | 395 |
| 4. | திருத்தணிகை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) | ... | 398 |
| 5. | பக்தரின் இதயத்திலே பரமன் (ஆ. கி. ரங்கராஜன்) | ... | 409 |
| 6. | வள்ளி மணவாளன் (கி. வா. ஜகந்நாதன்) | ... | 413 |
| 7. | வித்தும் விளைவும் (ரஸபதி) | ... | 417 |
| 8. | தெளிந்த அறிவும் தீஞ்சுவை நீரும் (குகசர்மா, இலங்கை) | ... | 425 |
| 9. | சங்கமும் தங்கமும் (பொன்னரங்கம்) | ... | 427 |
| 10. | THE MESSAGE OF KRITHIGAI (*Thiruppugal Mani*) | ... | 431 |


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

| மலர் 13 | பிலவஞு மார்கழிமீ<br>டிசம்பர் 1961—ஜனவரி 1962 | இதழ் 9 |
|---|---|---|


## முருகன் டெலிபோன்

"ஹலோ முருகா"—சிந்தை பேசுவது எந்தாய் கேட்டருள்க

(திருப்புகழ் மணி)

சிந்தை தெளிந்து விட்டால் உடலைப்பற்றிய கவலையில்லை. இரத்தினங்களுள் சிறந்தது சிந்தா ரத்தினமே. அதை நாம் கண்ட விடத்தில் சிந்தவிடாமல் காப்பாற்ற வேண்டும். சிந்தையைக் கண்டவிடத்தில் அலையவிட்டு உடலைமட்டும் அலங்கரிப்பது, நவராத்திரி கொலு பொம்மையை அலங்கரிப்பது போன்றதாகும்.

சிந்தை ஆண்டவன் வசப்பட்டால் ஆசாபாசங்கள் நம்மை விட்டுவிடும். ஆசாபாசங்களற்ற சிந்தையில் ஆண்டவன் வந்தமர்ந்து விடுவான்.

நரம்புகளால் கட்டப்பட்டது மனித உடம்பு. நரம்புகள் டெலிபோன் போன்றவை. மனம் நரம்புகளாகிய டெலிபோன் மூலம் உலக விஷயங்களில்

---

ஓதுவதின் மேலாகும் உள்ளொழுக்கம் ; உண்மைஇதில்
வாதமில்லை ; வையகத்து ஆன்றோர் வழக்காமே.

(காஞ்சி - சிறந்தபத்தின் சாரம்.)

செல்வதால், உலகத்திலுள்ள துன்பங்கள் உள்ளத்தை யொட்டுகின்றன. அந்த நரம்புகளுடன் மனத்திற்குள்ள சம்பந்தத்தை யறுத்துவிட்டு, ஆண்டவனுடைய சரணாரவிந்தத்தில் ஒட்டவைத்து விட்டால், உலகத் துன்பம் சிந்தையில் ஒட்டாது. ஒரு வீட்டில் ஒருவர் குடிவந்து விட்டால் மற்றவருக் கிடமில்லாததுபோல, முருகன் குடிவந்து விட்டால் ஆணவத்திற்கிடமிருக்காது. அவன் குடிவந்த இடத்தில் அவனுடைய வடிவு, தனம், மனம, குணம், குடி, குலம் எல்லாம் வந்துவிடும். முக்திக்குத் தாயகனாகிய முருகனுடைய ஜாஜ்வல்லியமான ஸ்வரூபம் தொண்டனுக்கும் வந்து விடும்.

அழுக்கைப் போக்குவது தீர்த்தம். தீர்த்தம் என்பதன் பொருள் புண்ணியம். முருகன் தீர்த்தன்; அதாவது பாபத்தைப் போக்குபவன். முருகன் பிறந்த இடம் ஞானமாகிய நெருப்பு. புகுந்த இடம் கருணையாகிய கங்கை. அதாவது ஞானத்தில் பிறந்து கங்கையில் புகுந்தான். கங்கையைத் தூய்மைப்படுத்தியவன் முருகன். முருகா வென்றால் நாம் தூய்மையாய் விடுவோம்.

முருகனுடைய உணர்ச்சி உள்ளத்தில் வந்து விட்டால் நானென்றது உடலிலிருந்து நழுவிவிடும். கருத்தை உலகத்தில் வைத்து வாயால் மட்டும் முருகா வென்று கத்துவதில் பயனில்லை. கருத்தை முருகனிடம் வைத்து முருகாவென்று ஒருதரம் சொன்னால், "முருகாவென ஓர்தர மோதடியார் முடிமே லிருதாளருள்வோனாகிய முருகன்" நம்முளிருப்பதை யுணர முடியும். அவ்வாறுணர்ந்தால் தேகம் நானல்ல என்பதை அவ்வுணர்ச்சி தெரிவிக்கும். முருகன் கருணாகரன். அவனுணர்ச்சி உள்ளத்தி லேறபட்டு

---

விட்டால் அவன் ஆகாததை யெல்லாம் விலக்கி ஆவ தெதுவோ அதைமட்டும் தருவான். அருணகிரியார், திருவேங்கட மாமலையி லுறையும் பெருமானை நோக்கி, "வேண்டிய போதடியர் வேண்டிய போகமது வேண்ட வெருது தவும் பெருமாளே" என்றார். முருகாவென்ற நாமத்தைச் சொல்லி ஈடுபடும் வரையில்தான் துன்பம். அந்நாமத்தில் மனம் லயித்து விட்டால் அதைப் போன்ற ஆனந்தம் வேறொன்றுமில்லை. வேண்டிய செல்வமெல்லாம் வந்துவிடும்.

முருகன் நாமம் இருக்கிறது. அவன் கொடுத்த நாவும் மனமும் இருக்கின்றன. ஒருமையுடன் சொன் னால் அவன் உள்ளே புகுந்து விடுவான்; வேறொரு வரையும் புக விடமாட்டான். அவர்கள் பிழை செய் தாலும் திருத்தி யாட்கொள்வானே யன்றி கைவிட மாட்டான். "பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கும் பெரு மான்" அவன். நாம் செய்யும் செயலின் வாசனை நம்மிடம் ஒட்டிக் கொள்ளும். நல்ல காரியம் செய்தால் நல்ல வாசனையும், தீய காரியம் செய்தால் தீய வாசனை யும் வரும். தீய செயலால் வரும் தீவினைகள் அட்டை போல் நம்முள்ளத்தில் ஒட்டிக கொள்ளுகின்றன. புகையிலைப் பொடியைப் போட்டால் அட்டை விட்டு விடும். அதுபோல் விபூதிப் பொடியைப் பூசி, முருகா வென்ற நாமத்தைச் சொல்லி, அட்டைபோல் முருக னிடம் நாம் ஒட்டிக் கொண்டால், தீவினைகளாகிய அட்டைகள் விட்டுவிடும். முருகா சரணம் என்று சொல்லி முருகனிடம் நாம் ஒட்டிக் கொள்வோம்.

சுபம்

---

கற்றதனைத் தான்மறவாக் காட்சியினர், பேரறிவு
பெற்றோரின் மேலோர், என்பர் பெரியோரே.

சுந்தரர் வரலாறு :

# பரவைபால் தூது

(கி. வா. ஜ.)

சுந்தர மூர்த்தி நாயனுர் பரவையாரைப் பிரிந்து சென்ற பிறகு அவருடைய பிரிவினுல் பரவையார் மிக வருந்திஞர். அவர் திருவொற்றி யூரை அடைந்து சங்கிலியாரை மணந்து கொண்டு வாழ்கிருர் என்ற செய்தியை உணர்ந்து அப்பிராட்டி யார் சினம் கொண்டார், அதனைப் பொருமல் நெஞ்சம் தளர்ந் தார். இரவு சயனத்திற் படுத்துத் துயிலுவதில்லை. விழிப்போடு இருந்தாலும் அமைதி பெறுவதிலலை. ஏதேனும் ஆதனத்தில் சிறிது நேரம் பொருந்தி இருப்பதில்லை. ஒரே நிலையில் நிற் பதும் இல்லை. வெளியிற் செலவதும் இல்லை. சுநதரமூர்த்தி யாரை மறக்கவும் முடியவில்லை; நினைக்கவும் முடியவில்லை. வாய்விட்டுத் தம் துயரத்தைச் சொல்லவும் இயலவில்லை. அவ ருக்கு உண்டான புலவியும் பிரிவுத் துன்பமும் அவருடைய என்பூடு நினறு உருக்கின.

இந்த நிலையில் பரவையார் இருக்க, தேவாசிரிய மண்ட பத்தை அணுகிய சுந்தரர் பரவையாரிடம் பரிசனங்களை அனுப்பினர். அவர்கள் வழக்கம்போல் பரவையார் திரு மாளிகையுட் புகப்போகும்போது அவர்களால் உள்ளே போக முடியவில்லை, வெளியில் நின்றுர்கள். அவரிற் சிலர் நாய னுரை அடைந்து. "திருவொற்றியூரில் நிகழ்ந்தவற்றை யெல் லாம் அறிந்து அங்குள்ளார் எங்களை உள்ளே விடவில்லை" என்று தெரிவித்தார்கள்.

அதனைக் கேட்ட சுந்தரர் மனம் வருந்தி அதற்கு என்ன செய்வது என்று ஏங்கினுர். அப்பால் சிறந்த உலகியலறிஞுர்

---

வளமார்ந்த செல்வத்தர் ஆவதினும், மிக்க
உளமார்ந்த வாய்மையினர், ஆவதுதான மேலாமே.

சிலரைப் பரவையாரிடம் அனுப்பிச் சமாதானம் செய்யச் சொன்னார். அவர்கள் பரவையாரிடம் போய்ப் பல நியாயங்களை எடுத்துரைத்து அவர் சினத்தை மாற்ற முயன்றார்கள். அவரோ சிறிதும் மனம் இசையாமல, "அவர் திறததில் இனி நீங்கள் ஏதாவது பரிந்து பேசினால என் உயிர் நீங்கும்" என்று சொல்ல, போனவர்கள அதனைக் கேட்டு அஞ்சி வநது விட்டார்கள். அவர்கள் நிகழ்ந்ததை நாவலூர் நம்பியிடம் சொல்ல, அவர் மிகவும் சோர்வுற்று வருநதினார். உள்ளத்தில் மிக்க கவலையோடு நள்ளிரவில் துயிலின்றித் துன்புற்றார். அருகில் உள்ளவர் யாவரும் துயிலில் ஆழ, அவர் மட்டும் தனியே இருநது சிந்தனையில் ஆழ்ந்தார்.

'முன்னை வினையால் இந்தப் பிறவிக்கு மூலமானவளிடம் நான் சார்வதற்கு நீ திருவுள்ளம் கொண்டருள வேண்டும். எம் பெருமானே, இந்த இரவில் அவளிடம் நீ சென்று அவளுடைய புலவியை நீக்கினால் நான் உய்வேன்; வேறு செயல் இலலை' என்று அவர் இறைவனை எண்ணித் துதித்து மறுகினார்.

தன்னுடைய தோழருடைய வருத்தத்தைக் காணச் சகியாத எம்பெருமான், அடிகள் நிலத்தில் தோயச் சுந்தரர் முன் எழுந்தருளினார். சுந்தரர் தாங்க இயலாத மகிழ்சசியோடு, உடம்பெல்லாம் புளகம் போர்ப்ப, கையைத் தலைமேற் குவித்துப் பின இறைவன அடித்தாமரையில் விழுந்தார்; எழுந்தார்.

அவ்வனபரைப பார்த்து இறைவன், "உனக்கு வந்த துனபம் யாது?" எனறு கேட்க, "எம்பெருமானே, அடியேன் புரிநத குற்றத்தினிடையே அடியேனை ஆழ்ந்து துனபுறுகிறேன். தேவரீரே என்னை எடுத்து ஆட்கொள்ள வேண்டும். தேவரீருடைய திருவருளால் திருவொற்றியூரில சங்கிலியை மணம்

---

இளமை சிறக்க இருப்பவர்கள் மேலெனினும்,
வளமையுடல் பிணியின்றி, வாழ்பவர்கள் மேலோரே.

புரிந்து கொண்டேன். அதனைப் பரவை அறிந்து தன்பால் நான் வந்தால் உயிர் விடுவேன் என்று சொல்லிக் கோபத்தோடு இருக்கிருள். நான தேவரீருக்கு அடியேன் அல்லவா? எனக்குத் தாயைவிடச் சிறந்த தோழர் நீர் அல்லவா? அறிவையும் இழந்து வருந்தும் எனக்கு இவ்விரவே தேவரீர் சென்று பரவையின் ஊடலைத் தீர்த்தருள வேண்டும்" என்று உருகி வேண்டினார் சுந்தரர்.

"நீ துன்பத்தை விடு. இப்பொழுதே உனக்குத தூதனாகப் பரவையிடம் போகின்ருேம்" எனறு வாய் மலர்ந்தான் இறைவன்.

சுந்தரர் மீட்டும் இறைவனை வணங்கினார். உடனே எம்பெருமான் பரவையார் திருமாளிகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பெருமானுடன் கணநாதரும் தேவர்களும் செல்லத் திருவாரூர்த் திருவீதி சிவலோகம் போல விளங்கியது.

பரவையார் திருமாளிகையை அடைந்தபோது உடன் வந்தவர்கள் புறம்பே நிற்க, எம்பெருமான் திருவாரூர்க் கோயில் அர்ச்சகரைப்போல உருக்கொண்டு தனியே உட்புகுந்தார். புகுந்து அடைத்திருந்த கதவைத் தட்டினார். உள்ளே துயிலினறிக் கிடந்த பரவையார், குரலி லிருந்து, 'நம்மை *உடைய எம்பெருமானைப் பூசிக்கும் மறையவர் போலும்*' என்று எண்ணி, 'பாதி இரவில் இவர் இங்கே வருவதற்குச் என்ன காரணம்?' என்று அஞ்சி எழுந்து வநது கதவைத் திறந்தார். எதிரே நின்றவரைக் கண்டு, "பெரியீர், இப்போது இங்கே எழுந்தருளக் காரணம் யாது?" என்று கேட்டார்.

மறையவர், "நான் கேட்பதை மறுக்காமல் செய்வதானல் சொல்கிறேன்" என்ருர்.

---

அழகிருந்து என்னபயன்? நாணமிலர் ஆயின,
பழகுனரும் அன்னவரை அன்பினேடு பாராரே.

பரவையார், "அதைச் சொல்லுங்கள். என்னால் இயலு மானால் செய்கிறேன்" என்றார். உடனே அவர், "நாவலூர் நம்பி இங்கே வந்து முன்போல் வாழ வேண்டும்" என்றார். அதுகேட்ட பரவையார், "நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்வது. என்னைப் பிரிந்து சென்று திருவொற்றியூரை அடைந்து சங்கிலியால் பிணிப்புண்டவருக்கு இங்கே ஒரு தொடர்பு உண்டாகுமோ? இரவில் வந்து நீங்கள் சொன்ன காரியம் அழகாயிருக்கிறது!" என்றார்.

"நங்காய், நம்பி செய்த குற்றங்களை யெல்லாம் மறந்து ஊன கோபம் ஆறி அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்குத்தானே நான் உன்னை வேண்டிக் கொண்டேன். ஆதலின நீ மறுக்கக் கூடாது" என்று மீண்டும் மறையவர் வற்புறுத்தினர்.

பரவையாருக்கு வெகுளி மூண்டது; "இதற்காக நீங்கள் இந்த வீட்டுக்கு வருவது உங்கள் பெருமைக்கு ஏற்றதன்று. திருவொற்றியூரில் பற்றுடையவர் இங்கே வருவதற்கு இசையமாட்டேன. உமக்கும் இங்கே இனி வேலை இல்லை; போம்" என்று மறுத்துச சொன்னாள்.

இறைவன தனக்குட் சிரித்துக் கொண்டான். உண்மைக் கோலத்தை உணர்த்த விலலை. சுந்தரருடைய வேட்கையைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் திருவிளையாடலை மேற்கொண்டு மீண்டான்.

இங்கே சுந்தரர், எம்பெருமானை அறிவில்லா நாயேன் பரவையின ஊடலை நீக்கும் பொருட்டு அனுப்பினேனே! என்ன பேதைமை என்று வருந்தி, எப்படியும் எம்பெருமான் அவள் புலவியைத் தீர்த்து வருவான் என்ற நம்பிக்கையோடு

---

உயர்ந்த குலப்பெருமை உள்ளா ரெனினும்
நயமாரக் கற்றவர்க்கு நன்மதிப்பு கண்டாமே.

எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். நேரம் ஆக ஆக அவருடைய ஆவல் மீதூர்ந்து, பலவகை எண்ணங்கள் எழுந்தன.

இறைவன மீண்டும் வந்தது கண்டு, அணைகடந்த வெள்ளம் போல ஓடிச் சென்று அவனை வரவேற்றார். எம்பெருமான் புன்முறுவல்பூண்ட முகத்தொடு வருவதைக்கண்டு,'போனகாரியம் வெற்றி' என்று எண்ணிக் கொண்டு, ''எம்பெருமானே, அன்று என்னை ஆண்டுகொண்ட உரிமையை மறவாமல், அதற்கு ஏற்ப இன்று எழுந்தருளி அவளுடைய வெகுளியைத் தீர்தது நலஞ்செய்தீரே!'' என்றுகளிப்புடன் கூறினார். இறைவன், ''உன்னுடைய விருப்பப்படியே பரவையின் இல்லும் நண்ணி, உன்செய்தி யெல்லாம் கூறினேன். அவள் ஏற்றுக் கொள்ளாமல் கொடுமை சொன்னாள். நான் எத்தனை வேண்டிக் கொண்டாலும் மறுத்து விட்டாள்'' என்றான.

சுந்தரர் இதனைக்கேட்டுத் துணுக்குற்றார்; ''எம்பெருமானே, தேவரீர் அருளிச் செய்யப் பரவையோ மறுபபவள்? நாங்கள் வேறு யாருடைய அடிமை என்று எண்ணி இதைச் சொன்னீர்கள்? இன்று எனதிறத்தில் அனபின்றி நலம் செய்யா விட்டால் அன்று வலியவந்து தடுத்தாட் கொண்டது எதற்கு? நான்படுகின்ற வருத்தத்தை நீர் நன்கு அறிவீர். பரவையிடம் சென்று அவள் கோபத்தைத் தணித்து என்னை அவளுடன் சேர்க்காவிட்டால் என்உயிர் நில்லாது'' என்று புலம்பி வீழ்நதார்.

அதுகண்ட இறைவன் அருளுடன் பார்த்து, ''இன்னும் ஒரு முறை அவளிடம் சென்று நீ அவளை அடையும் வழியைச் செய்கினறோம். உன்னுடைய துயரத்தை ஒழிக'' என்று கூறி இறைவன் புறப்பட்டான். சுந்தரர் உடன் சென்று வணங்கி வழியனுப்பி வந்தார்.

---

கற்பதிலும், கற்றார் கருத்துவழி நிற்பவர்க்கே
தற்சிறப்பாம் என்று, தகுதியுளர் ஓதுவரே.

பரவையார், மறையவராகி வந்த இறைவன் மீண்ட பின்பு, சில குறிப்புகளால் இறைவனே மறையவர் கோலத்தில் எழுந்தருளினான் என்பதை உணர்ந்து கொண்டார். "அந்தோ, நான் என்ன காரியம் செய்தேன்; எம்பிரான்கூறியதை மறுத்தேனே" என்று வருந்தினார். இரவு துயிலாமல் வாயிலைப் பார்த்தபடியே இருந்தார்.

இந்தமுறை இறைவன் தன் இயல்பான திருவுருவத்தோடு சென்றான். கணநாதர் சித்தர் இயக்கர் முதலியவர்களும் உடன் சென்றார்கள். யாவரும் பரவையார் திருமாளிகையுட் புகுந்த போது, பரவையார் உடல் நடுக்கத்தோடும் மேலெழுந்து பொங்கும் மகிழ்ச்சியோடும், இறைவனை எதிர்கொண்டுசென்று பணிந்தார். அப்போது எம்பெருமான அவரை நோக்கி, "ஊரனபால் உள்ள உரிமையால் நாவலாரூரன் ஏவ மீண்டும் உன்பால் வந்தோம்; இன்னும் முன்போல் நீ மறுக்காதே. நின்பிரிவால் அவன் மிக வருந்துகிறான். அவன் இங்கு வருவதால நீ அவனை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றான்.

பரவையார் தம் சிரத்தின்மேல் கைகளைக் குவித்து உளம் நடுங்கி வருந்த, "எம்பெருமானே, முன்பு மறையவர் கோலத்தில் யான்செய்த தவப்பயனுக வந்தது தேவரீர்தாமா?" என்று வியந்து, கண்ணீர் வார, "தேவரீருடைய சேவடி வருந்த ஓர் இரவு முழுதும் இங்கும் அங்குமாக எழுந்தருளி எளிவந்து கருணை பாலிக்கும்போது அடியேன் இசையாமல் என்செய்வது?" என்றார்.

"நின் பண்புக்கு ஏற்றவாறே நல்லதே பேசினாய்" என்று கூறி, இறைவன் அங்கிருந்தும் அகன்று சுந்தரரை அடைந்தார். சுந்தரர், "என். உயிரைக் காப்பாற்றும் பொருட்டுப் போன பெருமான் என்ன செய்து மீள்வாரோ?"

---

பகைவரைத் தண்டிக்கும் பாழ்வழியை ஆயாமல்,
தகைமைபெறத் தன்னை, உயர்த்துவது தககதுவே.

என்று கவலையுடன் ஏங்கி வழிபார்த்து நின்றார். இறைவன் வரவு கண்டு. எதிர்சென்று வணங்க, "எம்பெருமானே, என் உயிரைக் காவாமல் துன்புறுத்தும் பெண்மணியினிடமிருந்து என்ன செய்தி கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்க, "அவருடைய கோபத்தை ஆற்றி விட்டோம். இனி நீ அவள்பாற்போய்ச் சேர்" என்று அருளினான்.

சுந்தரர் மிக்க களிப்படைந்து," எந்தாய், எம்பிரானே, பந்தமும் வீடும் தருபவர் தேவரீர். அதன்படியே இங்கே துன்பமும் பின்பு விடுதலையும் அருளினீர்கள். இனி எனக்குத் துன்பம் ஏது?" என்று கூறி அவனுடைய திருவடியில் வீழ்ந்தார். இறைவன், "நீ பரவையினிடம் சென்று இன்புற்று வாழ்வாயாக" என்று வாழ்த்தி மறைந்தருளினான்.

உடனே சுந்தரர் தம் பரிசனங்களுடன் பரவையார் மாளிகையை நோக்கிப் புறப்பட்டார். விடிந்து விட்டமையின் தொண்டர்களும் எழுந்து சந்தனம், மலர்மாலை, கஸ்தூரி, கர்ப்பூரம், குங்குமம் முதலிய மங்கலப் பொருள்களை எடுத்துக் கொண்டு உடன் சென்றனர். பரவையார் சுந்தரரை வரவேற்பதற்கு ஏற்ற வகையில் விளக்கு, தூபம், நிறைகுடம் முதலியன வைத்துக் காத்திருந்தார். தோழியர் சூழ மாமணி வாயிலில் நின்ற அவர், சுந்தரர் வந்தவுடன் நாணமும் அச்சமும் மீதூர, அவரை வணங்கினார். நாயனார் பரவையாருடைய தளிர்ச் செங்கையைப் பற்றிக் கொண்டு திருமாளிகையுள் புகுந்தார்.

அப்பால் இருவரும் இறைவன் செய்த திருவிளையாடலையும், அவன் கருணைத் திறத்தையும் போற்றி மகிழ்ந்து, மனம் ஒன்றி இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து ஒன்று பட்டனர்.

---

முன்பெருகிப் பின்னழியும் செல்வம் முளைப்பதிலும்,
என்றும் ஒருபடித்தாய் ஏய்வாழ்வு நல்லதுவே.

## குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

**7.** நவநிதி பதயே நமோநம:

நவநிதி - ஒன்பது நிதிகளின், (வகையான செல்வத்தின்) பதயே - தலைவனுக்கு, நமோநம : போற்றி போற்றி.

**(1)** நவநிதிகள் :—

வடமொழி நிகண்டினபடி, பதுமம், மஹாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பன நவநிதிகள் ஆகும். இவற்றில் மகரம், குந்தம், வரம் என்ப வற்றிற்குப் பதில் முறையே கற்பம், நந்தம், மகா என்று தமிழர் கொள்ளுவர். இவை தாமரை, சங்கு முதலியவற்றின் உருவி லிருப்பதாலும், நிறத்தாலும் அப்பெயர் பெற்றன என்பர். இவற்றில் சங்கு வடிவான சங்கநிதியும் தாமரை வடிவான பதுமநிதியும் பிரசித்தமானவை. இந்த நிதிகள் எடுக்க எடுக்கக் குறையாத இயல்புடையன. இவற்றின் சிறப்பை ஆளுடைய அரசுகள்,

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானுளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்த ரலலராகில்"

என்ற திருவாக்கில் எடுத்தாளப் பட்டமையாலேயே அறிய லாம்.

நவ நிதிபதி : என்பதால் மேற்சொன்ன ஒனபது வகை யான செலவஙகளுக்கும் தலைவன் செவ்வேள் என்று போற்றிய தாயிற்று.

---

அன்பும் அருளும் உடையவரை, ஞாலத்தில்
எனறும் உயர்குலமா எண்ணுவது நல்லறிவே.

(அறிவுப் பத்து.)

(2) வேறுவகை: நவநிதி என்பன: வண்டோகை, மஞ்ஞேகை, பிங்கலிகை, பதுமை, சங்கை, வேகங்கைகாளி, மகாகாளி, சர்வதம் எனவும் கூறுவதுண்டு. எனவே இவ்விது நவநிதிகளுக்கும் தலைவன குபேரன் என்று நூல்கள் கூறுகின்றன. நமது குமரவேளும் நவநிதிகளை அடியவர்க்கு வழங்கும் குபேரனுதலின், நவநிதி பதயே நமோநம என்றார் பாம்பனடிகள்.

குகனும் குபேரனும்

செல்வமுடையவனை உலகில் குபேரன் என்பது வழக்கம். நவநிதித் தலைவனுன குபேரன ஐம்முகச் சிவனுரது அருமைத் தோழனும், அவரது ஏவல் வழித தொண்டாற்றும் அடியனும் ஆவன். எனவே ஐம்முகச சிவத்தின் வேருகாத அறுமுகச் சிவத்திற்கு நவநிதி குபேரனும் அடியனுகிருன். ஆகவே செல்வபதி (குபேரன்) போறறும் தலைவன் முருகன் செல்வ பதியே ஆம். இதனுல் தான் வைத்தீஸ்வரன் கோவில் எனப்படும் புள்ளிருக்கு வேளூர் முருகன, 'செல்வமுத்துக் குமரன்' எனப் போற்றப்படுகிருன். செவ்வேள் பிரானே செல்வமருள் செல்வன் எனபதை,

"உனது தாயுலக சராசரம் எவையும்
ஒருங்குடன் பூத்தவள், உந்தை
கனபரி புரண சுகததன, நின்தமையன்
காரிய முதல்வன், நின்மாமன்
வனசனு தியர்கள் பணிபதன், இவர்கள்
வளனெலாம் நினக்குரித்து அதனுல்,
வினவு செல்வத்துள் செல்வன் நீ போரூர்
வீறி வாழ ஆறுமா முகனே"

என்று சிதம்பர சுவாமிகள அருளியதும் காண்க.

---

இரக்கம் பெரிதுடையார் எனபவரை, ஈகை
சுரக்கும் நிலைகண்டு சொல்கின்ருர் நல்லோரே.

**(3) நவநிதி** ;— நவநிதி என்பது நவமணிகள் எனவும் படும். இவை மாணிக்கம், முத்து, புட்பராகம், கோமேதகம், வைடூரியம், வைரம், மரகதம், பவளம், நீலம் என்பன. இவை யனைத்திற்கும் குமரபிரான் தலைவன் என்னலாம்.

நவமணி : முருகபிரான் திருவவதார சமயத்தில், அதாவது சிவனார் தமது ஆறு திருமுகங்களி லிருந்து ஆறு தீப்பொறிகளாகி வந்தபோது, அருகிலிருந்த தேவி அஞ்சி காலில் சிலம்புகள் ஒன்றோடொன்று மோதும்படி எழுந்தோடினாள். அப்போது அவற்றி லிருந்து நவமணிகள் விழுந்தன. அவை ஒன்பது சக்திகளாகி, சிவ நோக்கால் கருவுற்று, வீரபாகு முதல் வீரதீரர் வரையுள்ள ஒன்பது வீரர்களை ஈன்றனர். அவர்கள் சிவனாராணையின்படி முருகனுதனுக்குத் தொண்டராயினர். நவநிதி என்பதை, நவமணி (களீன்ற நவவீரர்) என்று கொண்டு ஆறுமுகன் நவநிதிபதி எனவும் கொள்ளலாம்.

" வீரராம் ஒன்பது பேர் மெய்த்துணைக்
கொண்டவனே" (சிதம்பர சுவாமிகள்)

தொகுப்புரை - மயூரநாதன் நவநிதி தலைவன் ; குபேரன் போற்றும் செல்வபதி ; நவமணி [ நவவீரர்) பதி. ஆதலின் அத்தலைவனுக்குப் போற்றி என்று குமர குருதாசர் கூறினார் என்பதாம்.

---

வருந்தலுறும் காலத்தில் வாழ்வளிக்கும் நட்பினரை,
பொருந்தலுறும் உத்தமராப் போற்றுமிந்தப் பூதலமே.

திருத்தணிகை

## திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

தாக்கம ருக்கொரு சாரையை வேரொரு
சாட்சிய றப்பசி யாறியை நீறிடு
சாஸ்த்ர வழிக்கதி தூரனை வேர்விழு தவமூழ்குந்
தாற்பர்ய மற்றுழல் பாவியை நாவலர்
போற்பரி வுற்றுனை யேகரு தாதிகல்
சாற்றுத மிழ்க்குரை ஞாளியை நாள்வரை தடுமாறிப்
போக்கிட மற்றவ்ரு தாவனை ஞானிகள்
போற்றுத லற்றது ரோகியை மாமருள்
பூத்தம லத்ரய பூரியை நேரிய புலையேனைப்
போக்கிவி டக்கட னேஅடி யாரொடு
போய்ப்பெறு கைக்கிலை யோகதி யானது
போர்ச்சுடர் வஜ்ரவை வேல்மயி லாவருள் புரிவாயே:
மூக்கறை மட்டைம காபல காரணி
சூர்ப்பந கைப்படு மூளியு தாசனி
மூர்க்க குலத்திவி பீஷணர் சோதரி முழுமோடி
மூத்தவ ரக்கனி ராவண னேடியல்
பேற்றிவி டக்கமல லாலய சீதையை
மோட்டன் வனத்தொரு தேர்மிசை யேகொடு முகிலேபோய்
மாக்கன சித்திர கோபுர நீள்படை
விட்டிவி ருத்திய நாளவன் வேரற
மார்க்கமு டித்தவி லாவிகள் நாயகன் மருகோனே!
வாச்சிய மத்தள பேரிகை போல்மறை
வாழ்த்தம லர்க்கழு நீர்தரு நீள்சுனை
வாய்த்த திருத்தணி மாமலை மேவிய பெருமாளே!

(பதவுரை) (மூக்கறை.........முழுமோடி.)

மூக்கு அறை - மூக்கு அறுபட்டவளும்; மட்டை - மட்ட மான குணம் மலிந்தவளும்; மகா பலகாரணி - (தீய) பெருந் தீனி தின்பவளும்;

படு மூளி - குரூரமான உறுப்புக் குறைந்தவளும்; உதா சனி - கொடிய நெருப்பைப் போலக் கொதிப்பவளும்; மூர்க்க குலததி - மூர்த்தண்ய (அரக்கர்) குலத்தில் முளைத்தவளும்;

முழுமோடி - முழுமூடம் ஆனவளும்; விபீஷணர் சோதரி சூர்ப்பநகை - விபீஷணர் தமக்கையும் ஆன சூர்ப்பணகை;

(மூத்த அரக்கன்......இருத்திய நாள்.)

மூத்த அரக்கன் இராவணனோடு இயல்பு ஏற்றிவிட - (தனக்கு) முன் பிறந்த தமயனான இராவணனுடன், இயல்பாக இருந்த மோகத்தை மூட்டிவிட;

மோட்டன் - (அறிவு சிறுத்து) உடல் பருத்த அவன; கமல ஆலய சீதையை வளைத்து - செந்தாமரைக் கோயிலின் (முதல்வியான) சீதையை முற்றுகை யிட்டு;

ஒரு தேர் மிசையே கொடு - ஒப்பற்ற தேரில் (பலாத் காரமாக ஏற்றிக்) கொண்டு;

முகிலே போய் - மேக மண்டல வழியே (கார்மேகம் போல கடிது) சென்று;

மா கன சித்திர கோபுரம் கீள் - சிறப்பு மிக்க சித்திரம் வரைந்த உயர்ந்த கோபுரத் தலை வாயிலை உடைய;

படை வீட்டில் இருத்திய நாள் - (தன் ஆட்சித் தலமான) இலங்கையில் (உள்ள அசோக வனத்தில் சிறையிட்டுக் காவல்) வைத்த அந்நாளில்;

---

கற்றூர்தம் கல்வியினைக் காணலாம், அன்னவர்தம்
முற்றறிவால் என்று முதியவர்கள் ஓதுவரே.

(அவன்... முடித்த... நாயகன் மருகோனே !)

அவன் வேர் அற அ மார்க்கம் முடித்த - அந்த இராவணன் வம்ச மூலம் நாசம் ஆகும் அந்த (நீடித்த போர்) நெறியை நிறைவு செய்த ;

வில் ஆளிகள் நாயகன் மருகோனே - வில் ஆண்மையர் தலைவன் ஆன (திருமால் அம்ச) மாபெரும் இராகவன் மருமகனே !

(வாச்சிய......பெருமானே !)

வாச்சிய மத்தள பேரிகைபோல் மறை வாழ்த்த - மத்தளம் பேரிகை (முதலிய பறைகளின் பேரொலிபோல, வைதிகர்கள்) மந்திரங்களால் வாழ்ததுக் கூற ; (அதனால் மகிழ்ந்து ;)

மலர்க் கழுநீர் தரு நீள் சுனை வாய்த்த - (அர்ச்சனைக்கு உரிய) இந்திர நீலங்கள் மலரச் சுரக்கும் பெருநீர்ச் சுனைகள் வாய்ப்பாக உள்ள ;

திருத்தணி மாமலை மேவிய பெருமானே - திருத்தணிகை எனும் மகிமை மலையில் விரும்பி எழுந்தருளிய பெருமையிற் சிறந்த பெரியோனே !

(தாக்கு அமருக்கு..... அதி தூரனே.)

தாக்கு அமருக்கு ஒரு சாரையை - (பொரு பொருத்து) மோதும் போர்க்கு, ஒரு சாரைப் பாம்பு போன்றவனும் ;

வேறு ஒரு சாட்சி அறப் பசி ஆறியை - (மாபெரும் தருமனது நீதி மன்றத்தில்) வேறு ஒரு நற்சான்று கூறுவார் இல்லாதபடி, (தனித்துய) பசிதணித்துக் கொண்டவனும் ;

நீறு இடு சாஸ்திர வழிக்கு அதி தூரனை - திருநீறு அணிய அறிவிக்கும் அருள் நூல் நெறிக்கு அயலானவனும்

---

எதிர்நாளில் இன்னது நேருமென, இன்றறியும்
முதிர்ந்த அறிவினர் மூதுலகில் உள்ளனரே.

(வேர் விழு......மலத்ரய பூரியை.)

வேர் விழு தவ மூழ்கும் தாற்பர்யம் அற்று உழல் பாவியை - (மரத்தின் கீழ்) வேர் ஆழ்வது போல், (ஆருயிரைத் தாங்கும்) தவத்தில் அழுந்துகின்ற (பயனுள) கருத்தின்றி, (பல இடங்களில் வீணே) சுற்றித் திரியும் பாவியும் ;

நாவலர்போல் பரிவுற்று உனையே கருதாது இகல் சாற்று தமிழ்க் குரை ஞாளியை-நாவன்மை யுடைய நன்மக்கள் போல், உள்ளன்பு கொண்டு உன்னையே (ஊன்றி) உணராமல், (பல வகையில்) பகைமைக் குரல் பரப்பி, (நலமில் வழியில்) தமிழால் குரைக்கும் நாய் போன்றவனும் ;

நாள் வரை தடுமாறி போக்கு இடம் அற்ற வ்ருதாவனை நாள் முழுதும் கலகலத்து, அடைக்கல நிலயம் இழந்து விரைய மான வீணனும் ;

ஞானிகள் போற்றுதல அற்ற துரோகியை - மெய்யுணர் வுடைய மேலோரை வழிபடல் மறந்த துரோகியும் ;

மாமருள் பூத்த மலத்ரய பூரியை - மாபெரும் மயக்கம் மலர்ந்த மும்மல அழுக்கின் (முழுகி விளையாடும்) கீழ் மகனும் ;

(நேரிய புலையேனை......அருள் புரிவாயே !)

நேரிய புலையேனை - சரியான மாமிச பிண்டம் ஆனவனும் ஆகிய (எளிய) என்னை ;

போக்கிவிடக் கடனோ . (மேலும்) கைவிடுதல் தகுதியோ?

அடியாரொடு போய் கதியானது பெறுகைக்கு இலையோ- (சிறந்த) அடியவர்களுடன் சென்று, (வாழும்) முத்திபெற வழியே இல்லையோ ?;

போர்ச்சுடர் வஜ்ர வை வேல் மயிலா அருள் புரிவாயே- (உற்ற) போர்க்களத்தில் ஒளி (பரப்பி,) வயிரத் திண்மையும்,

---

சிற்றினத்தில தோன்றும் சிறுமதியர் என்பதனை,
முற்றும் செருக்கறிந்து, முன்னறிவர் முன்னவரே.

கூர்த்த ஞானமுமான வேல் ஏந்தி, ஏறு மயில் ஏறிவரும் தெய்வமே! (உமது பரம) அருளைப் பாலித்தால் ஆகாதோ, (எ - று).

விரிவுரை

மோசமான இச்சையால், எதையும் மோந்து திரியும் அரக்கர் இனம். இராமனை மோந்து கொள்ள முயன்ற சூர்ப்ப நகை, அதன் பயனாக மூக்கறுந்து போயினள். இலட்சுமணனை மோர நினைத்தாள் அயோமுகி. அவள் நாசியை அவ்வினை யோன் நறுக்கினன். மூக்கின் சுவாசத்தால், குறிப்பிட்டவரை ஊசலாட விட்டான் கும்பகருணன். தொல்லை தந்த அவன் மூக்கை, சுக்ரீவன் துண்டம் ஆக்கினன. மோசமான தன் பரம்பரை, இப்படியே மூக்கறுபட முதற் காரணம் ஆன சூர்ப்பநகையை, மூக்கறை என்பதே முறை.

இருந்த கணவன இறந்த பின், தலைமயிர் கழிப்பவள் மொட்டை. கழியாதவள் பெயர் மட்டை. மூக்கறையின் கணவன் ஆயுள் முடிந்தது. ஆயினும் அவள் மொட்டை அடித்திலள்; சாரம் அற்றவள்; எரிபடவே இருப்பவள் எனும் பொருளில், மட்டை என்றே உலகம் அவளை மதிக்கிறது.

" உம்பர் ஆனவர்க்கும், ஒண் தவர்க்கும், ஓதநீர்
இம்பர் ஆனவர்க்கும் ஓர் இறுதி ஈட்டுவாள் "

ஆன அவள் பலம் அளவிடல் ஆவதோ? ஆதலின் அவளை, மகாபலகாரனி என்று அறிகிறோம். அதனுடன, பெருந் தீனி தின்னும் பெருவயிறு உடையவள் என்றும் அப்பெயர்க்குப் பொருள உண்டு.

பத்து விரல்களிலும், முறம்போல் நகங்களை வளர்த்த அவட்கு, சூர்ப்ப நகை எனற பெயர் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. (சூர்ப்பம் - முறம; நாக - நகமுடையவள்.)

---

அறமுணராநதார் போலநடிக்கும் வஞ்சநெஞசர் தம்மை,
மறமறிந்த கள்ளரென மாண்புடையர் ஓர்வாரே.

தீய வழியை மோந்து திரியாதே என்று, அவள் மூக்கை மட்டுமா இலக்குவன் அறுத்தான்! பிறர் இரகசியங்களை, ஒட்டியிருந்து கேளாதே என்று, அரிய அவள் செவிகளையும் அறுத்தான்.

முட்டுவதுபோல் வெருட்டி மயக்கும் குயக் காம்புகளையும், வீசிய வாளால் நாசப்படுத்தினன். மூக்குப்போய், செவிபோய், தனக்காம்பும் தவிர்ந்த அவளை, இனி மூளி என்றும் அழைக்க லாம் அல்லவா!

அற்பத்திற்கு எல்லாம், கோப நெருப்பாகிக் குதிப்பவள் இவள்; அதனுல், அக்கினியின் பெயரான உதாசனி என்றும் அவளை உணரலாம். அருளுடைய மேலோரை அவமதிப்பவள் ஆதலின், அவ்வழியாலும் அப்பெயர் அவட்கே உரியது. (உதாசனம் - அவமதிப்பு).

இரக்கம் அற்றது அரக்கர் குலம். மூர்க்க அக்குலத்தில உதித்த அவளும் மூர்க்கிதான். அந்த மூர்க்கத் தனந்தான, அரக்கர்களை மூல நாசம் பெற முடித்து வைத்தது.

மூடம் ஆனவள் மோடி. இவளோ முழுமூடம். மேலும் வஞ்சகி, உக்கிர காளிபோன்ற உருவினள் ஆதலின், இப் பொருள் எலாம் பொருந்த, அவளை முழுமோடி என்று முடிக்க லாம்.

யார் இவள்? குற்றம் இன்றிக் குணத்தைப் பெருக்கிய, அறத்தை நம்பி அருள்வழி சென்ற, நீதியின ஒரு நிலயமான, அந்தண்மை என்னும் இமய உச்சியைப் புந்தியில் வைத்துப போற்றிப் புகழ்ந்த, தனிப்பெரும் விபீஷணர் தமக்கைதான.

என்ன வியப்பு; பீடையான இவளுடன் அவர் பிறக்க, ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டுமே! ஆம். அதைப் பிறகு ஆயலாம்.

---

பொல்லார் தவறுகளைப், பூரியர்தம் மாறுபட்ட
சொல்லால் அறிகவெனச் சொல்கின்றுர் நல்லோரே.

முழு மோடியான அவள் தமையன் இராவணனும், அவ ளைப்போல் ஒரு மோட்டன்தான்.

" செந்தா மரைமேல் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கான"

புனித சீதையின் புறத்கோலத்தை, விகாரம் பிறக்குமளவு அவள் இராவணனிடம் விளக்கிக் கூறினள். இபபடி

முத்த அரக்கன் இராவணனேடு, இயல்பு ஏற்றினள் அரக்கி.

சீதையின் இயற்கை அழகை இசைப்பாள்போல், அவனது இயல்பான காமததீயை, மேலும் எரியச் செய்த செய்தி இது. அவ்வளவில்,

" கரனையும் மறந்தான் ; தங்கை மூக்கினைக் கடிந்து [நின்றான்
உரனையும் மறந்தான் ; உற்ற பழியையும் [மறந்தான் ; வேற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினுல், முன்னைப் [பெற்ற
வரனையும் மறந்தான், கேட்ட மங்கையை [மறந்திலாதான்"

ஆன இராவணனை, மோட்டன் என்னுது வேறு என்ன என்று கூறுவது ? உணர்வு குறைந்து, ஒதியந தூண்போல் உடல் பருததவரை, ' மோட்டர் ' என்பதுதான் முறை.

கண்வழிப் புகுந்த காதல் கண்ருவிக் கதைகள் பலவுள. இதுவோ காதுவழி விளைந்த காமம் : சீச்சி ! என்ன அருவறுப் பான பேர்வழிகள் !

மாரீசனை ஏவினன் ; அவன மூலம், பெரிய பெரு மானையும் இளைய பெருமானையும் பிரித்தான். போக சிங்

---

அறிவு மழுங்கில் சொலமழுஙகும், எனறே
செறிநதாய நூற்கள் சிறக்கவுரைக் கின்றனவே.

தனையன் அவன், யோகிபோல் வேடம் தாங்கினன்: இப்படி யெல்லாம் முற்றுகை யிட்டான். தேவியை எடுத்தான். தேர் மேல் வைத்தான். மேகம்போல் ஏக வேகம் காட்டினன் இலங்கையில் திருவை சிறை வைத்தான்.

'மோட்டன் வளைத்தொரு தேர்மிசையே கொடு, முகிலே போய், நீள்படை வீட்டில் இருத்திய' இந்த அநியாயத்தை எவரிடம் சொல்லி ஆறுவது ?

வில்லாளிகள் நாயகன் இராமன் விறுவிறுத்தான். அரக்கர் வமிசத்தைக் கருவறுத்தான். தேவியை மீட்டான். அதனபின் அறம் மலர்ந்தது. வாய்மை வளர்ந்தது.

முருகா! அசுர குலததை வேரறுத்து அமரர் இனத்தை வாழ வைத்த நீ, மேல் சொன்ன நலம்பல விளைவித்த நாயகன மருகன் ஆயினை. மாமனுன திருமாலும், மருகனுன நீயும், உலகம் உய்தி பெற உதவிய அருளற்புதங்கட்கு அளவே இல்லையே!

அதர்மம் முழுதும் அழிந்தபின், அமைதியை உலகம் அடையும். அந்த சாந்தியின் தனிநிலம், தணிகை எனும் பெயர் தரித்துளது. முக்கால அர்ச்சனைக்கு, முக்குவளை மலரும் சுனையுடைய அத்தலத்தில் ஆர்வம் கொண்ட அத்தா! கேண்மையேன் குறைபாடும் கேட்டருளும்!

அன்றிருந்த சூர்ப்பநகையின் அம்சாவதாரங்கள், இன்றும் உலகில் இருக்கின்றன. பத்துத தலை அரக்கன் போல், அழிவு நினைவினர் அளவிலராயுளர். அவர்கள் நிழலில், அடியேனும் ஒருவன.

அதன் பயனாக, வாக்காலும் நோக்காலும் வழிமுறை தவறி, வாழ்வாரை மோதுவது என் வழக்கம் ஆயது; உத்த மரைக் கண்டால் ஓடி ஒளிவேன்; இது சாரைப் பாம்பின் சால்பு.

---

மிகுதிறமை, நற்செயல்கள் சான்றாக மேவுநர்கள்,
புகழ்க்குரிய ஆள்வினையர் எனபர் புனிதர்களே.

உண்ணும்போது ஒருவர்க்கு இட்டு உண்பது முறை. இட்டு உண்ணாதவர் வயிறுபோல், என் வயிறு எரிகிறதே என்றான், முன்பு ஒரு குண்டோதரன். இயலாதவர்கள், காக்கை குருவிகட்கேனும் ஒரு பிடிசோறு இட்டு உண்பது எங்கும் பெருவழக்கா யிருக்கிறது.

இறந்தபின், அறக் கடவுள் நீதி மன்றில், என்னென்ன சாதித்தாய் என்ற கேள்வி எழும். அவ்வமயம் சாயா தேவதைகள் அளவிலர், நிலவுலகில் இருந்த உருவில் எழுவர்.

என் பசி தவிர்த்தார். வேதனையை விலக்கினார். என் பாரத்தை இறக்கினார் என்று, எதிர் வந்து சாட்சி கூறுவர். பலத்த சான்றுகளைக் கேட்ட அறக் கடவுள், உரிய பதவியை அவர்கட்கு உதவும்.

இடாது இறந்தாரை, சாட்சி தேவதைகள் வந்து சழிக்கும். அதற்கு உரியது நரக அனுபவம்.

இதை நினைவுறுத்த, திருச்செந்தூர்ச் சந்நிதியில், சாட்சி போஜனம் என்ற சம்பிரதாயம், அந்த அற்புத அனுபவத்தை நினைவுறுத்த இன்றும் நிகழ்ந்து வருகிறது.

பசு வாயில் புல், மடி வழியில் பால்; தென்னை வேரில் நீர், உச்சியில் இளநீர்; இப்படி, 'ஏற்பவர்க்கு இட்டது எங்காயினும் வரும்'.

ஐயோ! இவைகளை உணராது, இந்நாள்வரை, தெருக்கதவைத் தாளிட்டு, தனித்துண்டு பசி தணிந்தவன் நான்.

'நீறு புனைவார் வினைகள் நீறுகும்'. இது ஆகமங்கள் செய்த அறிவிப்பு. அம்மரபிற்கு அதிதூரம் ஆயினேன். வெறும் நெற்றியுடன் விளங்குகிறேன்.

---

பார்க்கும் தகுதியிலார் என்று பழிப்பதனால்,
ஓர்க்கும் அவரியல்பு, ஒன்றேனும் மாறுதே.

(பழியாப்பத்து.)

வேர் ஆழ்ந்த மரம், தழைத்து விளங்கும். அதுபோல், தரு வான உடலிற்கு வேர் தவம். அக்கருத்தை அறியாது, பொழுது வாளாடிபோக்கினேன்.

தவம் முற்கு தாற்பர்யம் அற்று உழல் பாவி' நான். நியதி கெட்ட இது என் நிலை.

நாவலர் பலர், நம்பா! பாடி நின்னைப் பரவுகின்றனர். அவர்கள்போல், உன்னை அன்பு கொண்டு உணர்ந்திலன். வெறும் தமிழைக் கற்றேன். மேடை ஏறினேன். மொழி வாதத்தில் முடங்கினேன். சமய சச்சரவில் சரிந்தேன். குலப் பெருமை கூறிக் கும்மாளம் இட்டேன். அரசியல் நாடகம் ஆடினேன். இது, நாய் ஒன்று தமிழால் குரைத்த கதை. மலையைக் கண்டு நாய் குரைத்தால், மலைக்கு ஒரு சலனமும் நேரா. அது அசலமாகவே இருக்கும். அதுபோல் நான் ஓ என்று எவ்வளவு உரக்கக் குரைத்தாலும், இயற்கை யாகவே உலகம் இருக்கும். என் கூச்சலால், எங்கும் பகைகள் தான் எழுந்தன.

ஒவ்வொரு நாளும், சபல புத்தி. எங்கே போவது? எங்குச் சென்று தங்குவது? எங்கும் எதிர்ப்பு மயமா யிருக் கிறதே! அதனால், போக்கிடம் அற்ற விருதாவன் ஆயினன். இதுதான் என் விலாசம்.

[7] நம்பன் காப்பில் ஞானிகள்; ஞானிகள் காப்பில் நல் லோர்கள்; இதுதான் என்றும் உள்ள செய்தி. இதற்கு மாறாகி, ஞானிகளைப் போற்றாது தூற்றும் பொல்லாப்பே புரிந்தேன்.

---

பெருந்தன்மை யில்லாரைப் போற்றவிலை என்றே,
வருந்தி எவரும் வாய்திறப்ப தில்லையே.

அணுகத் தகாதவர் ரோகிகள்; அந்த ரோகிகளும் அருவறுக்கத் தக்கவர் துரோகிகள். ஆம், அப்பெயர்தான் எனக்குத் தகுதி.

மெய்யறிவினர் ஆசியுளதேல், பொய்யறிவு என்பது போய்த் தொலையும். இதை அறிவாரும் இலலையே ஐயோ !

சத் சித் ஆனந்தம் எனும் மூன்றில் இருந்து, மாபெரும் அருள் மலர்கிறது. இதற்கு மாறுன மருள், மும்மலத்தில் இருந்து முளைக்கிறது.

யானே, மா மருள் பூத்த மலத்ரய பூரி. (மலத்ரயம்—மும்மலம். பூரி - அநாசாரன்.)

வெறும் மாம்ச பிண்டமான என்னை, நேரிய புலையன் என்பதுதான் நியாயம். இபபடி யெல்லாம் கடை கெட்டுப் போன என்னை, மேலும் கைவிடுவது முறைதானே ?

திருவடி சம்பந்திகள் உன் அடியார்கள். அவர்களொடு கலந்தார்க்குக் கதியுண்டு என்பரே! அப்பேறு, மேல் சொன்ன ஒன்பது குற்றம் உடைய அடியேற்கு இல்லையே தானே ?

மும்மலம் போக்கும் ஒளிமயம்; வலிமயம்; ஞானக் கூர்மை மயம் ஆன வேல ஏந்திய விமலா! தாரக மயில் ஏறும் தற்பரா! எளிய என்னையும் பொருளாக்கி ஏற்க, பரம திருவருள் பாலித்தருள்! என்று வீழ்ந்து வணங்கி, மக்கள் குறைகளைத் தம் குறைபோல் முறையிடும் அருளார் முனிவர் அமுத வாக்கில் இது ஒன்று.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்:

---

*அரியதொரு பொருளை அடைந்திலர்கள் என்றே,*
உரிய பெரியோர், குறைகள் ஓதுவது இல்லையே.

# பக்தரின் இதயத்திலே பரமன்

[ஆ. கி. ரங்கராஜன்]

பக்தரின் இதயத்திலே பரமன் சந்ததமும் நடனமிடு கின்ருன். பண்பிலே சிறந்தவர்கள்தான் 'பக்தர்' என்ற பட்டத்தை அடைய அருகதை யுடையராவர். பக்தர்கள் அறிந்தோ அறியாமலோ செய்யும் குற்றங்களைப் பரமன் பொறுத்தருள்கின்ருன். பிற உயிர்களிடம் அன்பு, பெரியோர் களிடம் மரியாதை, இறைவன மீது மாருத பக்தி, நலலொழுக் கம், அடக்கம் இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந் திருப்பதே பண்பு எனப் பொருள்படும். இத்தகையோர் இறைவனருளுக்கு எளிதில் பாத்திர ராகின்றனர். ஆகவே தான் அருணகிரிப் பெருந்தகையாரும்,

புண்புடைய சிந்தை யன்பர்
தங்களினு டன்க லந்து
பண்புபெற அஞ்சலஞ்சல் எனவாராய்!

என இறைவனைத் துதிக்கினருர்.

தாழ்ந்த குலத்திலே பிறந்தாலும், தாழ்ந்த தொழில்களைச் செய்தாலும், இறைவனின தோற்றத்தை இதயத்திலே பதித் துக் கொண்டால, அவர்கள் உயர்நிலை அடைகின்றனர். இதற்குத் திருப்பாணுழ்வாரும், நந்தனுரும், சோகா மேளரும், கோராகும்பரும் உதாரண புருஷர்களாவர். கடமையிலே தவருமல் ஒழுகிவந்த காரணததால், கசாப்புத்தொழில் செய்த வனும், உயர்நிலை எய்தினதாக வியாச பகவான் மஹா பார தத்தில் குறிப்பிடுகின்ருர்.

பக்தியின் வடிவத்தில் இருப்பது பரமனே யன்றி வேறல்ல. ஆதலின், பக்தியைத் தன் இதயத்தில் ஊன்றி

---

அடைதற்(கு) அரும்பொருள், ஆகாத தென்று,
உடையார் அதைக்குறையர, ஓதுவது செய்யாரே.

யவர், பரமனின் வடிவிலேயே திகழ்பவராம். பக்தி என்பது இதயத்தில் ஊன்றி விட்டால் பண்பு என்பது தானாகவே பெருகி விடுமாம். பிற உயிர்களிடம் வெறுப்பும், எல்லா வற்றையும் தாமே உணர்ந்த மனப்பான்மையும் கொண்டு பரமனிடம் பக்தி செலுத்தினால் அது பக்தியாகாது. பரமனும் அவனைப் பகிஷ்கரிக்கின்றான்.

இதயமாகிய கடலிலே, பக்தி என்னும் மத்தை இட்டுக் கடைந்தார்களாம் அமரர்கள். துவேஷம், அகந்தை, மமதை முதலியன திரண்டு, பெரும் நஞ்சாக உருவெடுத்ததாம். கருணை வடிவமான கடவுள், அந் நஞ்சைக் கபளிகரம் செய்து, பண்பு என்னும் பாத்திரத்தில், பேரின்பமாகிய அமுதினை அமரர்க்கு வழங்கினன். இது கூர்மாவதார ரகசியம்.

எல்லாம் நம்முடையது என்ற எண்ணம் மாறி, எல்லாம் இறைவனின் மயம் என்ற மனப்பான்மை ஏற்பட்டால், பக்தி யானது அவ்விடத்திலே குடிகொள்கிறது. பக்தியற்றவர்கள், ஒருகாலும் நிம்மதியாக வாழ்ந்திருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் தங்களின் திறமையையும், தொழில்களையுமே நம்பி இருப்பர். அங்ஙிலை தவறிவிடும்போது, பரமனை இகழ்வர். ஆதலின், பரமனின் கருணையை அவர்கள் இழந்து விடுகின் றனர். அவர்களின் நிலை மிகவும் இழிவாகி விடுகிறது. இதனை ஸ்ரீ அபிராமிபட்டர் நன்கு வலியுறுத்தி, இறைவனைப் பக்தி செய்வதன அவசியததை அழுத்தந் திருத்தமாகப் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போது மனத்தில் வையாதவர் வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம் குன்றி, நாளும் குடில்கள்தோறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழலா நிற்பர், பாரெங்குமே!

—அபிராமி அந்தாதி 67-ம் பாடல்.

---

எடுத்தசெயல் முற்று(து) இருக்கின்ற போது,
கடுத்துக் குறையுரையார், கவினும் அறிவினரே.

சிலர் நேரடியாகக் குருவிடம் சிட்சை பெறாமலே, பெரும் வித்வான்களாகத் தோற்ற மளிக்கின்றனர். அதாவது பிறரின் செயல்களை மட்டும் கண்டு, அதைப்போல் தாமும் செய்து வெற்றி பெறுகின்றனர். ஒரு சிறந்த கவிஞனின் கவிதை, பாடல்களைக் கண்டு, அதே போல் மற்றொருவன் இயற்று கின்றான். ஓவியனின் செயலைக் கண்டு, மற்றொருவன், சிறந்த முறையில் சித்திரம் வரைகின்றான். இதைப போலவே ஒவ்வொரு தொழிலாளியை, மற்றவா கண்டு அவ்வாறே செய்து விடுகின்றனர். கணிதத்தின் சரியான விடையைக் குறுக்கு வழியிலே காண்பது போலத்தான், இவர்களனைவரின் செயல்கள் ஆகின்றன. இவைகள் அரங்கிலே அங்கீகரிக்கப் படுவதிலலை. இதையே தான், ஔவைப் பிராட்டியாரும் குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறியருளினார்.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவிததுத்—தானும்தன்
பொல்லாச சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி !

ஆனால் பக்தி விஷயத்தில் மட்டும் அவ்வாறன்று. பக்திக் குத் தலைவன் பரமன் ஒருவனே. ஆதலின், அவரவர் செய்யும் பக்திக்கு ஏற்பப் பயனை வழங்குகின்றான். அறிந்து பக்தி செய் தாலும், அறியாது பக்தி செய்தாலும், முறை தவறிச் செய் தாலும், எப்படிச் செய்தாலும், அவ்வாறு பக்தி செய்வோரின் இதயத்தில் களங்கமில்லாதிருப்பின, அவர்களின் பக்தியை இறைவன் அங்கீகரிக்கின்றான்.

---

நடுவில்லா மன்னனது நாட்டில் இருந்தே,
வடுவுரையார் அன்னவனை, வாழ்த்தும் அறிவினரே,

இதய வானில், பக்திக் கதிர் ஒளி வீசத் தொடங்கினால், அங்குப் படர்ந்துள்ள களங்கங்கள் ஒழிக்கப்பட்டு விடுகின்றன. பக்திச் சுடரானது, பரமனின் அருளை அதி விரைவில் விளை விக்கின்றது. சீதை இராகவனை இரவும் பகலும் தன் இதயத் துள் தெய்வமாக வைதததுத் தியானித்தாள். அதனால் விளைந்த பக்தித் தீ, இராவணனை அருகில் அணுகவொட்டாமல் தடுத் தது. அவன் நாட்டையும் வம்சத்தையும் தகித்து அழித்தது. மனம், வாக்கு, காயம் எனும் திரிகரண சுத்தியாக இறைவனை வழிபட்டால், சென்றுபோன பிறவிகளில் செய்த தீவினையும், இப்பிறவியில் இது காறும் செய்த தீவினைப் பயன்களும் பக்தித் தீயில் எரிந்து அழிந்து போகுமாம். இதனையே ஸ்ரீ ஆண்டாளும் தனது திருபபாவையில், பின் வருமாறு குறிப்பிடுகிறாள்.

மாயனை............................

தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது,
வாயினால்பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும், புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்!

தியாகராஜர், தீக்ஷிதர், சண்டேசுவரர், மீரா முதலி யோரின் பக்தி வெள்ளத்தில், பரமன் அமிழ்ந்து அமிழ்ந்து ஆனந்த முற்றான். அருணகிரியார், தாயுமானார், அப்பரடிகள் போனறோரின் பக்தி யமுதம் பாரெங்கும் பரவிப் படர்ந்து, பரமனுக்கும், ஏனைய எண்ணற்ற உயிர்கட்கும் அளவிலா இன் பத்தை அளித்துக் கொண்டிருக்கிறது! ஓங்குக அவர் தம் புகழ்!

---

உதவுகின்ற கேளிர், உதவாத நாளில்
பதறிப் பிறர்முன் பழியார் தெளிவினரே.

# வள்ளி மணவாளன்

[கி. வா. ஜகந்நாதன்]

இறைவனுடைய தாளைப் பணியத் தவம்செய்தவர் அருண கிரியார். விதையை நிலத்தில் நடும்போது வியப்பு ஒன்றும் தோன்றுவதில்லை. அது முளைவிட்டுக் கொடியாகிப் பந்தலில் படர்ந்து பூத்துக் காய்த்தபோது பெரு வியப்பாக இருக்கும். அப்படி முனைந்த தவம் இப்போது பலிததைக் கண்டு அவர் வியக்கிறார்

தாளைப் பணியத் தவம்எய் தியவா

என்று அதிசயம் அடைகிறார். அவர் இப்போது யார் தாளைப் பணிகிறார்.

முருகனை வழிபட்டு அன்பு செய்தவர் அவர். "முருகன் தாளைப் பணியத் தவம் செய்தேன்; அதன் பயன் எனை அடைந்தது" என்று சொல்கிறவர், அந்தப் பெருமானை நமக்கு அடையாளம் காட்டுகிறார். அவன் செய்த திருவிளை யாடல்கள் பல. அவனுடைய வீரம் புலப்படும் செயல்கள் சில. பெருமை புலப்படுவன சில. கருணையை வெளிப் படுத்துவன சில. இப்போது கருணைச் செயல்களில் மிகச் சிறந்த ஒன்றை நினைவுபடுத்திக் கொள்கிறார்.

முருகன் பெருமையை நன்கு விளக்குவது கந்தபுராணம். அவனுடைய திருவவதாரம் முதல் வள்ளி திருமணம் வரையில் உள்ள பல வரலாறுகள் அதில் வருகின்றன. சூரசங்காரமே திரு அவதாரத்தின் பயன் என்று பலர் நினைக்கலாம். அதோடு நின்றால் கந்தபுராணம் நிறைவேறியதாகாது. வள்ளி நாயகியின்

---

அயல்நாட்டில போய், அவர்தம் ஆசாரம் தீதாம்,
பயனிலவாம், என்று பழியார்சுற் பண்பினரே.

திருமணத்தோடு அது நிறைவு பெறுகிறது. இந்தப் பெருமான் பெருமை நிறைவடைவது வள்ளி திருமணத்தில். ஏன்?

அதற்கு முந்திய கதைகளெல்லாம் எங்கோ நடைபெறு கின்றன. தேவலோகமும் அசுரலோகமும் அந்த நிகழ்ச்சி களுக்கு அரங்குகளாக இருக்கின்றன. வள்ளி திருமணமோ இந்த உலகில் நிகழ்ந்தது. தேவ யானை திருமணம் திருப்பரங் குன்றததில் நிகழ்ந்தாலும், தேவலோகத்தி லிருந்து மணப் பெண்ணும் பிறரும் வந்தார்கள். வள்ளி திருமணத்தில் முருகன் தன் கருணையினால் அந்தப் பெருமாட்டியை வலிய ஆட்கொண்ட கதை வருகிறது. ஆருயிர்களை அவன் பேரரு ளால் அணுகி நலம் செய்து ஆண்டு கொள்வான் என்பதையே அந்த வரலாறு காட்டுகிறது. முருகனுடைய பெருங்கருணை யும் எளிமையும் அந்த வரலாற்றினால் புலனாகின்றன. முருகன் பால் அன்புகொண்டு பணிபவர்களுக்கு, அவன எளிவந்து கருணை பாலிபபான் எனற செய்தி நம்பிக்கையை ஊட்டுவது. கானக் குறததியையும் ஆண்டவனாதலின நம்மையும் ஆள்வான் என்ற உறுதியான நம்பிக்கை உண்டாக அவ்வரலாறு உதவுகிறது.

ஆதலின் அன்பர்கள் முருகனைத் தேவ யானை கணவன் என்று சொல்வதைவிட வள்ளி மணவாளன் எனறு அடிக்கடி சொல்கிறார்கள். கந்தவேளைப பற்றிய பிற வரலாறுகள் தெரிநதாலும் தெரியாவிட்டாலும், வள்ளி பதம் பணிந்த வர லாற்றை அன்பர்கள் அவசியம தெரிந்து கொளவார்கள்.

அருணகிரி நாதர், வள்ளி பதம் பணிந்த செவ்வேளை நினைககிறார்.

பாளைக் குழல்வள் ளிபதம் பணியும் வேளை.

தலைப்பாளை எனபது குழலில அணியும் ஆபரணம். அதைத் அணிநதிருக்கிறாள் வள்ளிநாயகி. அவளை ஆடகொள்ளச் செல்

---

வறியவனே, ஈகை வளர்ககவில்லை எனறே
அறிஞர் பழியார் அன்னவனை எனறும்மே.

கிறான் முருகன். அவள் பாதம் பணிகிறான். அவள் உடலைப் போக்கி ஆட்கொள்கிறான். முகம் சிணுங்கிச் சினம் கொள்ளும் குழந்தைக்குப் போக்குக் காட்டிக் கெஞ்சிச் சோறூட்டும் தாயைப்போல அவனும் கெஞ்சுகிறான். கந்தலோகத்தி லிருந்து இறங்கிவந்து வேட்டுவ உருவம் புனைந்து வருவது கருணை யெனறால், அவன் பின்னும் தனனைத் தாழ்த்திக் கொண்டு வள்ளியை வணங்கியது அவனுடைய பெருங் கருணையைக் காட்டும் செயல் அல்லவா? முன்பும், ''பணியா என வள்ளி பதம் பணியும், தணியா அதிமோக தயாபரன்'' என்று, அந்தப் போலி மோகம் தயையின் வேறு வடிவம் என்று அருணகிரியார் குறிபபித்ததைக் கண்டோம்.

வேள் என்பது எல்லோரும் விரும்பும் அழகுடையவன் என்னும் பொருளுடையது. மன்மதனுக்கும் அநதப் பெயர் உண்டு. ஆனால அவன் கருவேள்; இவன் செவ்வேள். அவன் மயலை உண்டாக்குபவன; இவன் மயலை அழிபபவன். அவன் இரவுக்கு மன்னன்; இவன ஒளிக்கு இறைவன. அவன் பிறப்புக்கு மூல காரணமானவன்; இவன் அதனை ஒழிப்பவன். ஆதலின் பிறர் காமத்தைப் போக்கும் முருகனே காம விளை யாட்டு அயர்ந்தான் எனபது பொருந்தாது. அவன் அருள் விளையாட்டு அது.

பிறரால் விரும்பப் பெறும் வேளாக இருந்தும், முருகன பெருங் கருணையால் தானே வள்ளி நாயகியை அணுகிப் பணிந்தான். இப்படிப் பணிந்தாலும் அவன் பெருமை குறைந்து போகவில்லை. இது ஒரு நாடகம். செல்வத்திற் சிறந்த ஒருவன் ஒரு நாடகததில் ஏழையாக வேஷம் போடு கிறான்; அவன் ஏழையாகி விடுவானா? இங்கே பானைக்குழல் வள்ளி பதம்பணியும் வேடனாக வந்தாலும் அவன் பெரிய

இழுககாம் குணமுடைய கீழோா இயலபை,
ஒழுக்கமுளர் தாம்குறைத்தே ஓதாா என நாளினுமே.
(துவ்வாப்பத்து.)

வன். தேவர்களுக் கெல்லாம் பெரிய தேவன். தேவலோகத்துக்கு மன்னன் இந்திரன்; அவனுக்கும் மன்னன் இவன். ஆகவே இவன் தேவலோக சக்கரவர்த்தி.

சுரபூபதி.

மிகச் சிறந்த தலைவர்களை மேரு சமானதீரர் என்று வருணிப்பது வழக்கம். மலைபோலச் சலியாமல் நிற்பவர்கள் அவர்கள். மேருவோ பொன்மலை; மிக உயர்ந்தது. அது உலகத்துக்கு அச்சாக நிலவுவது. தேவர்கள் வாழும் இடம். சூரிய சந்திரர்கள் வலமாக வருவது. இவ்வாறு மேருவைப் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. முருகனும் மேருவைப் போல அசஞ்சலனாகி, காண அழகுடையவனாகி விளங்குகிறான்; தேவர்களுக்கு ஆதாரப் பொருள் அவன்; சுடர்கள் அவனை வலம் வருகின்றன; உலகம் முழுவதும் அவன் ஆணையால் நடைபெறுகிறது. தேவர்களுக்கு மாத்திரம் தலைவன என்று நினைத்துவிடக் கூடாது. அவன எல்லாச் செயல்களுக்கும் அச்சாணியாக நிற்கிறான். ஆதலின் அவனைத் தான மேருவென்று சொல்ல வேண்டும்.

வேளைச் சுரபூபதி மேருவையே

'இத்தகைய பெருமானுடைய திருத்தாளைப் பணியப் பெருந்தவம் செய்திருக்க வேண்டும். அந்தப் பயன் இந்தப் பிறவியிலே வந்து சேர்ந்தது பெரிய அதிசயம்!' என்கிறார் அருணகிரியார்.

தாளைப் பணியத் தவம்எய் தியவா!
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

அவனை எந்த முறையில் வழிபட்டார் என்பதை இனிப் பார்க்கலாம்.

---

பழியுடையோர் செல்வம் பயன்படா; என்றும்
வழிவழியே அன்னார் வறுமையரா நிற்பாரே.

## வித்தும் விளைவும்

(ரசபதி)

அரசர் சத்திய விரதர், புனித மன்னர் என்ற பெயர் பூண்டவர். அவர் மகன் சங்கசூடணன். அவன், அழகுமிக்கவன். அறிவில் தூயவன். உத்தம குணத்தன்.

அரசர் வம்ச குலகுரு ஆநந்தர். சங்கசூடணன், அவரிடத்தில் கற்கத் தக்க கலைகளைக் கற்றுக் கொண்டு இருந்தான்.

குருவிற்கு ஒரு மகள். அவள், இளம் பருவத்திலேயே தாயை இழந்தவள். தந்தையே தாயும் ஆயினார். வளம் பெற மகள் வளர்ந்தாள். அவள் பெயர் சுமுகி. அழகில் திருமகள். கல்வியில் கலைமகள். இவை, இன்றைய அவள் இயல்.

பொதுவாக, ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பது, அவ்வளவு நல்லது அல்ல. வால் அறுந்த நரிகள்போல், கலப்பு மணம் கருதுகின்ற ஒரு சிலர், பேஷ் பேஷ். அதுதான் சரி என்று கரகோஷம் செய்யலாம். பருவநிலை, ஆரம்பத்தில் பல்லிளிக்க வைக்கும்; விபரீத நிலை, அதனபின விருத்தியாகும். பெற்றவர்கள் வயிறு பற்றி எரியும் ; இதுதான் என்றும் உள்ள அனுபவம்.

சுமுகி, பெயர்க்குத் தக்க பெருமகள். எனினும், சங்கசூடணனது அழகு கண்டாள் ; அறிவை நினைந்தாள் ; உத்தம அவன் குணம் நோக்கி உள்ளம் உருகினாள். பருவ வயதும் படபடத்தது. கண்ணில் கருத்தில், எண்ணில் எழுத்தில், அவட்கு அவனே காட்சி ஆயினான். கலைகளில் கருத்தைச் செலுத்தி, குனிந்த தலை நிமிராத சங்கசூடணன், அவள் மனநிலையை அறிந்திலன்.

---

காலம் இடமறியார், தம்வீரம் காட்டுகின்ற
சீலத்தார், பேடிகளே என்றறிஞர் செப்புவரே.

ஒருநாள் இரவு மணி எட்டு. கற்று வந்த பாடத்தில் ஏதோ ஒரு ஐயம் எழுந்தது. அதைப் போக்கிக் கொள்ள, ஆநந்தரிடம் வந்தான. அவர் அங்கு இல்லை. நாளை வருவம் என்று திரும்பினான்.

ஏன் திரும்பிப் போகிறீர்! அப்பா வருகிற நேரம்தான். இரும் என்று எழுந்தது ஒரு இனிய குரல். திடுக்கிட்டுத் திரும்பினன். தேவதைபோல் எதிர் நின்றாள் சுமுகி. அப்படியே என்று அமர்ந்தான். தலை குனிந்து இருந்தான். பார்த்த கண் வாங்காது பார்த்து, பயனுன அவன் அழகைச் சுமுகி பருகினள். அதையும் அவன் அறியான்.

நாணம் பெண்கட்கு நலம். ஆடவர்க்குமா அது? என்று நகைத்தாள். வாழைப் பழத்தில் ஊசி செருகுவதுபோல், வார்த்தைகளை மேலும் வளர்த்தாள். மதனும் இரதியும்போல், நாம் இருவரும் மண வாழ்க்கை நிகழ்த்த, பல நாளாக மதிக்கின்றது மனம். அதில் ஒன்றும் தவறு இல்லையே என்று, முன்வந்து வார்த்தையை முடித்தாள்.

நெருப்பை மிதித்தவன்போல், சங்கசூடணன் பாவை மொழிகேட்டுப் பதைததான. தையல் சிந்தனை தடுமாறியுளது; திருத்த வேண்டும்; அரிய தரும நெறியை அறிவிக்க வேண்டும் எனறு, உணர்ந்தது அவன உள்ளம்.

அம்மா! என் தநதை, சத்ய விரதர். அவர், கனிவு காட்டி நாடாளும் காவலர். தந்தையைப பின்பற்றுவது தநயனது தருமம்.

நீ என் குருபுத்ரி; வயதிலும்; மூத்தவள்; நான் குரு புத்திரன்; வயதில் இளையவன். தர்ம நியதிப்படி, நீ என் தமக்கை. இருவரும் முறை தவறினுல், பாவமும் பழியும்

---

வளர்கின்ற நாணமின்றி உண்டுயிர்க்கும் வாழ்வில்,
வளரும் பசிதான்; வாழ்வமைதி யில்லையரோ.

படரும்; நரக வாழ்வு தொடரும் என்று மேலும் வார்த்தையை முடிப்பதற்குள், குறுக்கிட்டாள் அக்கோதை.

அரசிளங் குமரா! இரவும் பகலும் நின்னை எண்ணினேன். உணவை மறந்தேன். உறக்கம் துறந்தேன். ஏங்கி இருந்தேன். நீ சொல்லும் பாவ புண்ணியம் யானும் அறிவேன். மாதர் விரும்பினுல், எவரையும் மணக்கலாம். தொட்டு விடுவதுதான் தொல்லை. மண வாழ்வைத்தான் மதித்தேன். என்னை மறுக்காதே என்று சொல்லிக் கொண்டே, காமததால் மனம் கனல, பள்ளம் கண்டு பாயும் நீர்போல், தாவி வந்து அவனைத் தழுவினள். என் ராஜா! நான் உன் ரோஜா என்று, அவள் வாயில் இருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

இவ்வளவும் ஒரு கண நிகழ்ச்சி. சங்கசூடணன் மனம் சங்கடப்பட்டது, குப்பென்று வியர்த்தது மேனி. தையலை உதறினன். தடுமாறி வீழ்ந்தாள்.

படித்தவளா நீ? ஆநந்தர் தந்தை என்று சொல்ல, உனக்கு அருகதை இருக்கிறதா? எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெணபுத்தி பினபுத்தி என்று, மற்றவர் சொல்வதை இதுவரை மறுத்தேன். ஆன்ருேர் சொற்கள் அனுபவம் மிக்கவை. அதை இப்போது உணர்கிறேன்! என்று, அதிர்த்தான். உடனே விறுவிறு என்று, ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறினன்.

அரும்பாடு பட்டு வளர்த்த பெற்ருேர்கள் இருக்க, போன போக்கில் மனத்தைப் போக விடுவது, புத்திசாலித்தனம் அல்ல. சுமுகி அதை நினைத்திலள். ஏற்பான் எனறு எண்ணினள். இப்போது மனம் இடிந்தாள். குந்தி யிருந்து குமுறினள்.

---

அன்பில்லா(து) ஈந்தார்க்கு, அவ்ஈகையால் இன்பம்
என்றுமிலை; அன்னதுதான் லோப இயல்(பு) என்றறியே.

அதே நேரத்தில், ஆநந்தர் வந்தார். மாலை மாலையாக் கண்ணீர் வடிக்கும் மகளைக் கண்டார். அதிர்ந்தது மனம். அம்மா! என்ன செய்தி என்று அலறினர்.

என்னென்று சொல்வது? உடனே பெண்மையின் சாகஸம் பிறந்தது.

அப்பா! சங்கசூடனன் வந்தான். என்னை வலிந்தான். பெண்மையை அழித்தான். ஒழிந்தது வாழ்வு. ஓடிப் போயினன் என்று ஓலம் இட்டாள்.

அப்படியா செய்தி? என்று அலறிய ஆநந்தர், பேயறைந் தவர்போல், உலும்பினர். அங்கிருந்து ஓடினர்.

என்னை ஏற்க மறுத்தான் வாழ்வு, இன்றோடு முடிந்தது. நானும் அழிந்தேன்; அவனும் ஒழிந்தான் என்று அமைதி கண்டது சுமுகி மனம்.

இரவு மணி பத்து. ஆநந்தர், மன்னரை அணுகினர். வெம்பி அழுது விவரம் கூறினர். அரசர் சத்திய விரதர்க்கு, இது கேட்டு ஆத்திரம் அதிகரித்தது. நிதானம் இழந்தார். ஒரு மைந்தன என்பதை உணர்ந்திலர். எதிர்காலத்தில் நாட்டை ஆளப் பிறந்த நன்மகன் என்பதையும் அறிந்திலர். மன்ன வர்க்கு ஒரு நீதி; மற்றவர்க்கு ஒரு நீதியா என்ன?

ஆசாரியன் மகள் வாழ்வை அழித்தான். அதற்கு உரிய எம் தண்டனையை அறிவீர்கள். ஒரு நொடியில் நிறைவேற்றி, அச்செய்தியை அதிவிரைவில் வந்து எனக்கு அறிவிக்க வேண்டும். பாரபட்சம் காட்டினால், உங்கள் தலை உருண்டு விடும்; ஓடுங்கள்! என்று உருத்துக் காவலர் உரைத்தார்.

அரசர் ஆக்ஞைப்படி விறுவிறுத்த கொலைஞர்கள், சங்க சூடனற்கு விவரம் கூறினர். சூழ் நிலை அறிந்த சங்கசூடனன்,

---

செய்யத் தகாதசெயல், மேற்கொண்டு செய்தல்தான்,
வெய்யமுடத்தன்மை; வேறெனன பேசுவதே?

விதியின் விபரீத விளைவு இது என்று, ஆறி மனம் தேறினன். செங்கோலுக்கு மிஞ்சிய சங்கேதம் இல்லையே!

எடுப்பான விலங்கிட்டு, கொலைஞர்கள் இழுத்துச் சென்றனர். நகரை அடுத்து ஒரு காடு. அங்கிருந்த பாறை ஒன்றின் மேல், அவனைப் படுக்க வைத்தனர். கால்களை வெட்டினர்; கைகளைத் துணித்தனர். அவர்கள் மனமும் அலறியது. அங்கிருந்து அகன்றனர்.

குருதி கொப்புளிக்கிறது. உத்தம புத்திரன், வேதனை தாங்க முடியாமல் வெம்பினன்.

சத்தியம் செத்தது: தர்மம் தளர்ந்தது. நிலம் தாங்கும் நீதித் தெய்வமும் கொடித்ததோ? என்று, வனமெல்லாம் எதிரொலிக்க வாய்விட்டு அழுதான் அரசர் மகன்.

அதிர்ந்தது காடு. வெடித்தது பூமி. செத்துப் போகாது சத்தியம். தருமம் என்றும் தளர்ந்ததே இல்லை. தூய நீதி தேவதை, ஒரு நாளும் தூங்கியதே இல்லை என்று, வெடிப்பில் இருந்து விளைந்தது பேரொலி.

யார் குரல் இது? சங்கசூடணன் ஏறிட்டு நோக்கினன். எதிர் நின்றார், ஆயிரம் சிரத்தர் ஆதிசேடர்.

உத்தமா! இப்பிறப்பில் உனக்கு இடர்விளைத்த சுமுகி, அடுத்த பிறப்பில, அநியாய இக்கதியை அடைவள்; அரச தண்டம் அன்றே நிகழலாம். மாபெரும் உலகம், சில நாளில் அதை மறநது விடும். உலகம் என்றும் உணருமாறு, தெய்வம் நின்று சாதிக்கும்; தெரிகிறதா? எனறு ஓதி மறைந்தார ஆதிசேடர். இதுவரை முன்பிறப்பின வரலாறு முடிநதது.

• வைகுந்த துவார பாலகர்கள், அடர்ந்த சாபத்தை அனுபவிக்க, இராவண கும்பகர்ணர் ஆயினர். பேதை சுமுகி,

---

ஆடம்பர தருமி ஆக அளிப்பதுதான்,
நாடகமா இழிந்த நாசஉப காரம்மே.

அவர்கள் தங்கையாய்ப் பிறந்தாள். சூர்ப்பநகை என்பது இப்போது அவள் பெயர். சங்க சூடணன், தமக்கை யெனும் சங்கற்ப சால்பால், விபீஷணத் தம்பியாய் வந்து பிறந்தான்.

தோயமாபுரி என்று ஒரு நகர். அதனில் இருந்து அரசு புரிந்தவன் வித்யுச்சுவன். இவன் அசுரர் மரபில் உதித்தவன். உடல் வலி மிக்கவன். சூழ்ச்சித் திறத்தில் சுழித்தவன். மல்போர் வில்போரில் வல்லவன். கண்டார் விரும்பும் கட்டழகன்.

அசுரரும் அரக்கரும், ஒன்று சேர்வர். வானவரைப் பெரிதும் வருத்துவர். சேர்ந்ததுபோல் தோற்றமே தவிர, அரக்கர்க்கும் அசுரர்க்கும் உட்பகை உண்டு; அவர் வாழ இவர் பொறுர்; இவர் உயர்வை அவர் தாங்கார்; இந்த உலக வரலாறே ஒரு விசித்திரந்தான்.

இன்று மூவுலகை ஆள்கின்ருன் இராவணன். பொல்லாத அசுரர் மனம், அது கண்டு பொரு பொருத்தது. பகையாளிக் குடியை உறவாடிக் கெடுக்க, அசுரப் பெருக்கம் ஆலோசனை செய்தது.

வித்யுச்சுவன், ஒரு நாள் இலங்கைக்கு வந்தான். விருந்தினர் என்று, உவகத இராவணன் அவர்களை உபசரித்தான். அழகு ராணிகளான அணங்கினரைக் கொண்டு, ஆடல் பாடல் அதிகம் நடத்தி, வந்தவரைப் பெரிதும் மகிழ்வித்தான். அசுரர்கள் தன் பிரதாபத்தை அறிய வேண்டும் என்பது இராவண சிந்தனை. உறவாடி உளவறிதல் அசுரர்கள் நினைவு. அட பாவமே! இதுதானு உலகம். இந்நிலையில் அவர்கள் இருவரும், பல நாள்வரை, உள்ளத்தில் ஒட்டாது உறவு கொண்டு இருந்தனர்.

அசுர வித்யுசசுவன் தேஜஸை, சூர்ப்பநகை கண்டாள்; கண்டதும் அவனைக் காதலித்தாள். இது அவள் ஜன்ம வாசனை. மோகம் இருவருக்கும் மூண்டது.

---

நண்பர்பால் நல்லிரக்கம் நண்ணுமை, தூய்மையுறு
புண்பல்ல; பாழ்கொடுமை எனபர் படிததவரே.

அவன் வேறு குலம், இவள் வேறு இனம். தரித்திரப் பிசாசுகள், இப்படிக் காம தாண்டவம் ஆடின. அதை இராவணன் அறிந்தான். விதியின்றி இருவரையும் மணம் செய்து வைத்தான். வரிசைபல வழங்கி, அன்பு காட்டித் தம்பதிகளை அனுப்பி வைத்தான். பகைமைச் சிந்தனை, மைத்துனக் கேண்மையில் மாறிவிடும் என்பது அவன் எண்ணம். பாம்பிற்குப் பாலூட்டி வளர்த்தாலும், மாபெரும் அதன் விஷம் மாறுவது இல்லையே.

சூர்ப்பநகை, கணவனுடன் ஆநந்த போகம் சிலநாள அனுபவித்தாள். வஞ்ச நெஞ்சன் விதயுசசுவன, அவள் இஷ்டப்படி யெல்லாம் ஆடி, அவள் மூலம், இலங்கையின உள்காப்பு இரகசியங்களை எல்லாம் உணர்ந்தான்.

ஒரு நாள் அரக்கர்க்கும் அசுரர்க்கும், பொங்கி எழுந்தது போர். உள்நாட்டு ரகசியங்களை உணர்ந்து செய்த யுத்தத தால், அளவிலா அரக்கா அழிந்தனர். விவரம் அறிந்த இராவணன், சீறி எழுநதான். அசுரர் பலரைக் கருவறுத் தான். மைததுனன் எனறு பார்த்திலன. வித்யுசசுவனை வெட்டி வீழ்த்தினன.

விளைவை யறிந்த சூர்ப்பநகை, ஓஙகி மாரடித்து ஒப்பாரி வைத்தாள். சம்பந்தி வீட்டிற்கு, அழிவு தேடிய சதிகாரன் தன் கணவன் எனபதும், அவள் அறியாதது அல்ல. அவனை வேறு வகையில் திருத்தாமல், கொனறு விட்டானே அண்ணன் என்று கொதித்தாள்.

தண்டகாரண்யத்தில் ஒரு நகர் அமைத்து, அவளை, இங்கு சுதந்தரமாக இரு என்றுன இராவணன். படைபலமும், கர தூஷணர் காவலும் வைத்தான. வசதி பல இருந்தும், அவள்

---

அறிவிலி தனதுணையா ஆவதினும், தானே
தறிபோல் இருந்தால், தழைக்கும் தனிஇன்பே.

பூர்வ வாசனை போகவில்லை. வனவாசிகளை, பலபட வருத்தி யிருந்தாள்.

ஒருநாள் இராமனைக் கண்டாள். கண்டதும் காமம் கொண்டாள். இணக்கத்திற்கு இடையூறு ஜானகி. தூய அத் தேவியைக் கொல்லத் துணிந்தாள். அறிந்த இளையவன், அவளை எட்டி உதைததான். அவன் ஆதிசேடன அம்சம். சங்க சூடணற்கு அன்றளித்த வாக்கு, அவனையும் அறியாமல், இன்றைய அறிவை இயக்கியது. உடைவாளை உருவினன். காதையும் மூக்கையும், குயக் காம்பையும் அறுத்தான்.

சஙக சூடணன் அஙகபங்கம் ஆக, அன்று செய்த பாபம், உறுத்த இத்தண்டனையோடு ஒழிந்தது.

உபாதை பொருது அவள் ஓலமிட்ட ஒப்பாரி, இராவண வதம் ஆகும் வரை, ஓயாது ஒலித்துக் கொண்டே இருநதது.

இராவணன் இறந்தபின, சகோதர பாசம் தாஙக லாற்ருத விபீஷணர்,

"கொல்லாத மைத்துனனைக் கொன்ருயென்று, அது குறித்து
பல்லாலே இதழதுக்கும் கொடும்பாவி, நெடும்பாரப்
[பழிதீர்ந்தாளே"

என்று ஒலித்த ஒலியுடன், அவள் ஒபபாரி ஓசை உருக்கரந்து ஒழிந்தது.

முன பிறப்பில் விதைத்த வினைவிதது, இப் பிறப்பில் வினை வாகிக் கண்முன் விளங்குகின்றது என்பதற்கு, இதைவிட வேறு உதாரணம் வேண்டுமோ? எனறு சாந்தி பெறுகின்ருர் சாதுக்கள்.

ஓம்.

---

சீரழியும் மூப்பில், வெறுக்கும் சினம்பிறக்கும்;
ஓரவரு மேனும், ஒழிக்கவழி இல்லையரோ.

# தெளிந்த அறிவும் தீஞ்சுவை நீரும்

(குகசர்மா. இலங்கை.)

பேரறிவும் தெளிந்த நீரும் ஒரு தன்மை யுடையன. நீரில் லாமல் உலகம் நிலைக்க மாட்டாது. "நீரின்றமையாது உலகெனின்" என்பது வள்ளுவர் வாக்கு. நீரைப்போல் அறிவு மக்களின் வாழ்க்கைக்கு அவசியம் தேவை யானது. அறிவு என்னும் ஒன்று இல்லாவிடின், மக்களுக்கும் மாக்களுக்கும் வித்தியாசம் இல்லாது போய்விடும். உலகம் என்று கூறுமிடத்து உலகில் உள்ள அறிவு மிக்காரையே அச்சொல் குறிக்கும். இதை விளக்கவே 'உலகம் எனபது உயர்ந்தோர் மாட்டு' என இலக்கண நூலார் கூறினர். அறிவைக் கொண்டே மக்கள் தம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிச் சுகமாக வாழ்கின்றனர்.

இரண்டுவித தன்மையுள்ள நீரை நாம் காண்கிறோம். ஒன்று நாம் குடிக்கவோ, தாவரங்கட்குப் பாய்ச்சவோ உதவாத உவர்நீர். உபயோகிக்கத் தகுந்தது சுத்தநீர். அறிவு அற்றவர்களிடம் உள்ள செல்வம் உவர்நீர் போன்றது. பேரறிவாளரின் செல்வம், உண்ணத் தகுந்த நீர் நிரம்பிய பெரிய தடாகம் போன்றது. இங்கே செல்வமல்ல அறிவே மாற்றமடைகினறது. இக்கருத்தையே வளளுவர்,

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு"

என்று கூறியுள்ளார்.

அறிவிற் குறைந்தவர்களையும், பேரறிவாளர் ஆகும் திறனுடையவரையும் நாம் காண்கிறோம். அத்திறனுடையாரை ஆசிரியர் அல்லது குரு என அழைககிறோம். உவர் நீரை நல் நீராக்கும் தேசிகர் ஒருவரை, கந்தபுராணம் பாடிய கச்சி

---

தன்னளவில் துய்ககத தழைக்கும் திருவுடையான்,
துன்னும் வறுமையதில் நீங்காது தோய்வானே.

யப்பர் நம்முன்னே காட்டுகிறார். முகில்கள் கடல் நீரைத் தம்மிடத்தே கவர்கின்றன. திரும்ப அவற்றை மழையாக உலகிற்குக் கொடுக்கின்றன. அந்த மழை நீரில் உவர்த் தன்மையில்லை. யாவர்க்கும் பிரயோசனப படத்தக்க நீராக அது விளங்குகின்றது. தன்னிடம் வந்தடைந்த ஒருவனது தீவினைகள் எலலாவற்றையும் நீக்கி, உலகத்திற்கும் தனக்குமே நன்மை தரும் பேரறிவுடையவனுக்குவது குருவின் கடமை. இதனை புலவர் வாக்கால் காண்போம்.

" தேக்கு தெண்டிரைப் புணரிநீர் வெம்மையைச் சிந்தி
ஆக்கி வானொளி உலகில் விட்டடேகலால், அடைந்தோர்தம்
நீக்கரும் வினை மாற்றியே நன்னெறி யிடைச் செலுத்தி
போக்கின் மேயின தேசிகர்ப் பொருவின புயல்கள் "

என்பது புலவர் வாககு

மலர்நத நல்ல அறிவும் சில காலஙகளில் மங்கிப் போவதுண்டு. அவற்றிற்கு ஒரு காரணம் தீயவருடன சேருதல். இதைப்போலவே நலல நீரின சுவையும் அது சேரும் நிலத்தின் தன்மையால் மாறு படுகின்றது. வள்ளுவர் இவை இரண்டையும் ஒரே குறளில் கூறுகிறார்.

" நிலத்தி யல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தற்கு
இனத்தியல்ப தாகும் அறிவு "

என்பது அக்குறள்.

அறிவை மறைக்கும் மற்றோர் காரணம் ஐந்து புலன்கள். மதுரைப் பதியிலே நலலநீர் நிறைந்த பல தடாகங்கள உண்டு. ஆனால் அவற்றின் புனிதத் தன்மையை, வள்ளை, செந்தாமரை, தேனையுடைய ஆம்பல் முதலிய மலர்களும், அவற்றின் பசுமையான இலைகளும் மறைத்து விடுகின்றன. இக்காட்சியை, நல்ல அறிவும் புலன்களின் வழி போவதற்கு உவமையாக எடுத்துக் காட்டுகிறார் கல்லாட ஆசிரியர்.

---

கணவன் குணமறிந்(து) ஒழுகாத கோதை
விழுமியளே அல்லள், அவள்தொடர்பு வேதனையே.

" வையகத்து உருவினர் மஸரா அறிவினைப்
புலன்நிரை மறைத்த புணர்ப்பது போல
குளிர்கொண் டுறையும் தெளிநீர் வாவியை
வள்ளைசெங் கமலம் கள்ளவிழ் ஆம்பல்
பாசடை மறைக்கும் கூடற் பெருமான் "

என்பது கல்லாட ஆசிரியர் வாக்கு

புலன்களாலாவது, இன்றேல் சூழ்நிலைகளா லாவது கவரப்படாத அறிவும் உண்டு. அதுவே உண்மையான பேரறிவு. அதனையுடையவன் இறைவன். அதனாலே இறைவனை " வாலறிவன் " என்றார் வள்ளுவர். இதற்குப் பொருத்தமாக இராமலிங்க சுவாமிகளும், " ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே " என்று அழைத்தார். நம் முன்னோர்களாகிய கற்றறிந்த பேரறிவு உள்ளவர்களால் காட்டப்பெற்ற உவமைகள், உணர்ந்து மகிழ்தற்குரியவை யாகும்.

---

## சங்கமும் தங்கமும்

### (பொன்னரங்கம்.)

" சங்கமும் தங்கமும் " என்ற தலைப்பில் சகரத்திற்குப் பின் தகரம் வரல இயல்பாதலின், முதலில சஙகமும் அதன் பின்னர் தஙகமும் என்ற தொடருள்ள பொருள் மிகப் பொருத்தமானதேயாம் அஃதோடமையாமல சகரத்திற்குத் தகரம் இன வெழுத்தாதலாலும், மோனை யெழுத்துமாதலாலும், இதன் தலைப்புப் பொருள் மிகமிகப் பொருத்தமானதேயாகும். இதனில சஙகம், தங்கம் என்ற இரு சொற்றொடர்களை, ஒரு உம்மைத தொகை கொடுத்து சஙகமும் தஙகமும் என்றுயிற்று. எனவே சங்கம் இன்னதெனபதும், தஙகம் இன்னதெனபதும்

---

மனமாட்சி யில்லா மனைவாழக்கை, என்றும
இனமாடசி யில்லா, இடர்வாழ்க்கை யாகும்மே.

ஆகிய இவற்றின் இவனனோரன்ன தன்மைகளை இணைத்துக் கூறி, இரு பொருளின கடமைகளைக் கூறிஞல்தான், இதன் தலைப்புப் பொருள் முற்றுப்பெறும் என்பது பெற்றும்.

சங்கம் தான சுத்தமாயிருந்து, தன்னைச் சார்ந்தாரை அறியாமை யாகிய இருளை நீககி அறிவுச்சுடர் கொளுத்தி, எநநெறிக்கண் செல்ல வேண்டும், எந்நெறி மெய்ந்நெறி, எதனை அடைந்தால் அடையும்பேறு எனபவைகளை அறிவுறுத்தும். அதுபோலவே தங்கமும், தான் சுத்தமா யிருந்து தனனைச் சார்ந்தாரை மாசகற்றியும், இருளைக் கடிநதும், உயிர்புபொருள், உயிரில் பொருள், இவைகளை தன்னிறமாகச் செய்யும் இயல்பிற்றும். இதனை நம் அபிநவக் கவிஞரான கம்ப நாடரும்; "தசரதருடைய இரதம் மிதிலைக்குச் செலலுங்கால், சந்திரசைலம் எனும் வெறபின்கண் தங்கிய வளவில், பொன்ஞற் செய்யபபட்ட உருளாதலின, கல்லின் மீது பலமுறை உருணடு செனற வளவில், கரிய நிறம் வாய்ந்த கற்கள் பொனனுருவானதை, மெய்யுணர்வு பெற்றுத் தெளி வடைந்த சானரோர், ஒருக்கால் சிறியரைச் சாரும் அமயம் நேர்ந்துழி, அவர்களுடைய மருண்ட தன்மைத்தாய மயக்க நெறியிற செலலும் கள்ளத்தை மாற்றி நல்வழிப் படுத்தலை,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருணட தனமையை மாற்றுவ ரெனுமிது வழக்கே;
உருண்ட வாய்தொறும் பொன்னுருள உரைத்துரைத் [தோடி
இருண்ட கல்லையும் தன்னிற மாக்குவ இரதம்"

எனனும் அருமைப் பாசுரத்தால் விளக்குகினருர். அது போலவே சங்கமும் தன்னை யடைநதவர்களை தூநெறிப் படுத்தலை, மேகத்தைபபோன்ற இருளென்னும் அறியாமையை அடைந்துள்ள மனித இனங்களாகிய உயிர்த்தொகுதி முழுதும், பரிசுத்தமான நற்குணஙகளின்றி, தங்கள் இல்லற*வாழ்க்கைப் பாதையில் தலை தடுமாறி முரணுக ஒழுகும் சமயத்தில், சத்சஙகமாகிய சன்மார்க்கக் குழுவைச் சார்ந்து, அதனகண்

---

அன்பில்லார் தம்முறவு ஆகா; அதிகரித்த
துன்பமவர் வாழ்வு; தொடர்பகையாம் கண்டாயே.

இயங்கும் ஆன்ற சான்றோர்களின் நெறியின்கண் பட்ர்ந்து, துங்கமாகிய பரம்பொருளைக் காண்பது அறிவாகையால், அம் மெய்ப்பொருளை உளத்திற் கொண்டு, குற்றமற்ற குணத்தின வழித்தூய நனெறி யொழுகுகிறரென்பதை,

"மங்குலின் தன்மை சார்ந்த மன்பதை உயிர்க ளெல்லாம்
தஙகிய குணங்களினறித் தலைதடு மாறுங்காலை
சஙகமாம் இடதைதையண்மிச் சான்ரோரின் நெறியிலேகி
துங்கமாம் பொருளைக் கொண்டு துகளறு குணததராகுர்"

எனனும் பாடல் நமக்கு அறிவுறுத்துகின்ற தல்லவா! இதனை நினைதொறும் நினைதொறும் இன்பம் பயககுகின்ற தலலவா!

சஙகம், தண்டமிழ் வாணர்களால் விரும்பற் பாலது.

தங்கமும் பொருள் உள்ளவர்களால் விரும்பற்பாலது.

சங்கத்தினிடமும் பொருள் நிறைந்துள்ளது.

தஙகத்தினிடமும் பொருள் நிறைநதுள்ளது.

சஙக மிருந்ததா லல்லவா முற்காலததவர் அகப்பொருள், புறப்பொருள் இவைகளை யடைநதார்கள்.

தஙக மிருநததா லல்லவா பெரும்பொருளை யடைந் தார்கள்.

சங்கத்தால் சிநதாமணியை யடைந்தார்கள்.

தங்கத்தால் செல்வர்களும், 'சிந்தாமணி' எனும் அணியை யடைந்தார்கள்.

சங்கத்தில் 'சிலம்ப'ணியாய கலனை யடைந்தார்கள்.

தங்கத்தினுலும் பொற்சிலம்பாகிய காலணியை யடைந் தார்கள்.

*சங்கத்தினுல் 'மேகலை' என்னும் மணியை யடைந்தார்கள்.

தஙகததினுல் மேகலாபரணம், எனும் இடையணியை யடைநதார்கள்.

---

ஒருபொருளும் தாராக் குறுங்கையன், ஊன்றி
வருபுகழால் வாழான்; மறுமையினும் தேய்வானே.

சங்கத்திஞல் இரு செவிகளுக்கும் 'குண்டலகேசி' என்னும் பண்டைய அணியை அடைந்தார்கள்.

தங்கத்திஞல் குண்டலகேசி யென்னும் காதணி புனைந்து அணிசெய்ய லாஞர்கள்,

சங்கத்திஞல் குறுந்தொகையையும் நெடுந்தொகையையும் அடைந்தார்கள்.

தங்கததிஞல் நெடுந்தொகையை யடைந்தார்கள்.

சங்கத்திஞல் பலதிறப்பட்ட கோவைகளை யடைந்தார்கள்.

தங்கத்திஞல் பலவகைபபடட விலைமதிப்புள்ள கோவை யாகிய அணிகலனகளை யடைநதார்கள.

சஙகததிஞல் பல உலாவைக் கண்டு மக்கள் உள்ளத்தை குலாவச் செய்தனர்.

தங்கததிஞல் செல்வந்தர்கள் யானை யெருத்தமர்நது உலாப்போநது மக்கள் உள்ளத்தை களிக்கச செய்தனர்.

சஙகததிஞல் பல் வகையான தூது முறைகளை யடைந் தார்கள்.

தஙகத்திஞல் செல்வர்கள் பிறர்பால் தூது அனுப்பித் தங்கள கருத்தை வெளியிட்டனர்.

சங்கத்திஞல் கீழ்க்கணக்கும் மேல் கணக்கும் பொதிய வைகரும் சிறப்பை யடைந்தார்கள.

தங்கத்திஞல் கீழ்க் கணக்கு மேல் கணக்கு என்னும் இன்ஞேரனன பல கணககுகளை வைத்துப பெரும் பொருளை யடைநதார்கள்.

நம் வடலூர் வள்ளற் பெருமாஞரும், "தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்த சன்மார்க்க சங்கமே கண்டு களிக்க வும்'' எனவும் கூறிப்போந்து, சங்கத்தையும் தஙகத்தையும் இணைத்துக் கூறி இதன் பெருமையை விளக்கிஞர் போலும்.

சஙகம் தங்கம் எனற சொல்லுக்குப பிறிதொரு சாரார், சங்கத்தை யடைந்தவர்கள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற் பேற்றையும் அடைவரென்றும், தங்கத்தை யடைநதவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனற நாற் பேற்றையும் அடைவரென்றும் நயம்பட உரைப்பா ராயினர்.

## The Message of Krithigai

Think of Him and live. The Lord watches where we think we are unobserved. The Lord protects with hands unseen where we think we are forsaken. The Lord leads where we think we are leaderless The Lord accompanies where we feel we are lonely. He enthuses us to move forward where we would fain stop He forces us to move from within. We are but of His force What matters it to the Soldier when the highest field Martial is controlling the operations of the march ? Our watch-word is not "Do and die" but "do and do ever to live and never to die".

So shall we live, move and have our being in the Lord.

To abide in Him is the highest form of worship.

He is the All and He is the best to think of, to sing of, and to unifiy with.

The Lord willed to play. The Worlds came into being. The Lord dances. The worlds and all that there is, dance in tune with the

music of the Spheres Mala lies have no place, dissolved in the melodies of creation The song of creation and the verity of Divine thought inspire all matter into the self forgetfulness of ecstacy! Hence no fear! All cheer!

In the World of creation the Lord is what is and what is not, what exists and what does not, brilliance and shade, form and non form, the one common spring board which is the mother-hood of all opposites so styled. God forms are illustrations, not limitational.

Bakthi is love of God of innumerable forms, the one God who of innumberable forms receives and requiets the love of the Baktha. One of such forms in which He blessed the world of Jivas is *Sri Karthikeya.* May His grace be ever on us!

*Thiruppugazh Mani.*

---

கூடுமின ! இன்புறுமின் !

## திருத்தணிகையில்

**31—12—1961 ஞாயிற்றுக்கிழமை**

## திருப்படித் திருவிழா

" படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே "

(திருத்தணித் திருப்புகழ்)

ஆளாகிநின் இருநால்எழுத்(து) அறியாதநாள், அறிவார்களைக்
கேளாதநாள், செவியூறவே கிடையாதநாள், அதில் ஆசையே
மூளாதநாள், நிலமீதுதான் முதல்நாளில் அங்(கு) எழுதாதநாள்,
நாளாகுமோ? வாளாயுதா! நாராயணா! நாராயணா!!

No 1506 ASOKA 1506

# Coffee

**Ours for Quality**

RAW ROAST OR GROUND

**GANESH & CO., (MADRAS) LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்.

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




**குடை மார்க் பினைல்**

(சிறந்த கிருமி நாசினி)

*தயாரிப்பாளர்:*

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

*விநியோகஸ்தர்கள்:*

**கார் & கம்பெனி**

1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.**


Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.